www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

# தமிழீழம்



வெளியீடு : அரசியல் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

ஏப்ரல் 89

குரல் 10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காப்டன் ரமேஷ்குமார் (சிவஞான சுந்தரம்) 25.8.61

வீரமரணம் : 20.5.88

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளின் குரல்

## காலனியாதிக்கத்துக்கு முடிவு

40-ஆண்டு கால உரிமைப் போராட்டத்தின் மூலம் ஈழத் தமிழ் மக்கள் வெளிப்படுத்திவந்த விருப்புக்கள், எதிர்பார்ப்புக் களை எல்லாம் உதாசீனம் செய்துவிட்டு, தமிழர் விருப்புக்களும் எதிர்பார்ப்புக்களும் தான் கூறுவது போல்தான் இருக்க வேண்டும் என்று கூறி இந்திய அரசு, தமிழர்களின் சார்பில் இலங்கை அரசுடன் இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதானது, இந்திய அரசு இந்து சமுத்திர பகுதியில் தனது வல்லாண்மையை நிலைநிறுத்தத் துடித்துக் கொண்டிருக்கிறது என்பதை துல்லியமாக எடுத்துக்காட்டிற்று.

இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த உதவுவதற்காக என்று கூறி தமிழீழத்துக்குள் புகுந்த இந்தியப்படை அமைதி ஒப்பந்தத்தில் தமிழர்களுக்கு நன்மைபயக்கும் என அறிவிக்கப் பட்ட எந்த விடயமும் செயற்பட எதுவித நடவடிக்கையும் எடுக்காது விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறித்து ஈழத்தில் உரிமைப் போராட்ட உணர்வையே கொன்றுவிடும் வகையில் செயற்பட்டது.

ஒரு காலனி நாட்டில் காலனியாதிக்கப்படை எப்படிச் செயற் படுமோ அவ்வாறே இந்தியப்படை தமிழீழத்தில் செயற்பட்டுவருகிறது.

தமிழ் மக்கள் வெளியே நடமாடுவதைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம்.

தமிழ் மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்க மீன் பிடித் தடை. தமிழர்களின் அன்றாட வாழ்வு பறிக்கப்படும் வகையில் கல்லூரி, அரசு, தனியார் கட்டிடங்கள் முகாம்களுக்காக ஆக்கிரமிப்பு.

பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க பத்திரிகை அலுவலகங்கள் மீது குண்டுவீச்சு நடவடிக்கை மேற்கொண்ட இந்தியப்படை தமிழீழ மக்களைக் கொன்று குவித்து, பெண்களைக் கற்பழித்து, உடைமை களைச் சூறையாடி, வீடுகளை எரியூட்டியும், செல் குண்டு தாக்குதலை மேற்கொண்டும் சுடுகாடாக்கி தான் ஆதிக்க இராணுவம் தான் என்பதை நிரூபித்து வருகிறது.

இது தவிர தமிழீழத்தில் போக்குவரத்துச் சேவை கட்டண நிர்ணயம், காடுகளில் மரம் வெட்ட பர்மிட் விநியோகம், வாகனங் களைத் தெருவில் செலுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் விநியோகம், குடும்பத் தகராறுகள் பற்றிய விசாரணை உள்ளிட்ட பொறுப்புகள் அனைத்தும் **இந்திய இராணுவ அதிகாரிகள் கையில் இருக்கும் நிலை, இராணுவ ஆட்சி தான் தமிழீழத்தில் நிலவுகிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது.**

இவற்றுக்கெல்லாம் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியதைத் தொடர்ந்து அசாம், திரிபுரா, உதம்பூர் பாணியில் தமிழீழத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி தனது நலன்களை, விருப்புக்களைச் செயல்படுத்தக்கூடிய ஒரு பொம்மை அரசை வரதராஜப்பெருமாள் தலைமையில் ஏற்படுத்திய, இந்திய அரசு அதை ஈழத் தமிழர்களுக்கு தான் பெற்றுக்கொடுத்த பெரும் சாதனையென உலகுக்குப் பறை சாற்றியது. ஆனால் இன்று அந்த வரதராஜப்பெருமாள் அரசே 'தனக்கு அதிகாரங்கள் எதுவும் இல்லை. தரை மார்க்கமாகப் பாதுகாப்புடன் செல்ல முடியாததால் விமானங்களில் பயணம் செய்யவேண்டி யிருக்கிறது. மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் எதுவும் வழங்கப் படவில்லை' என்று வெளிப்படையாகவே கூறி தான் ஒரு பொம்மை அரசுதான் என்பதை ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கூறியபடி தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுத்தர எதுவித முயற்சியும் எடுக்காது தமது நலன்களை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கும் இந்தியப் படையின் ஆதிக்க உணர்வுகளை தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களுமே நன்கு புரிந்துகொண்டுவிட்டனர்.

எனவே தமிழீழத்தில் இந்தியப்படையின் ஆட்சிக்கு முடிவு நாள் நெருங்குகிறது.

## இறுதி ஆயுதம்

முற்றுகையில்
அவன்

தன் கைக்குண்டால்
தன்னையே
அழித்துக்கொண்டான்.

சிதறிய
உடலின் துண்டுகள்
எதிரியைப் பார்த்து
நகைத்தன.

யசோதரன்
அடிக்கடி
சொல்லுவான் :-

'விடுதலைப் புலிகள்
சாவுக்கு அஞ்சுவதில்லை.
அதனால்......
அவர்களை மோதும்
எதிரிகள்
சாவுக்கு அஞ்சுகிறார்கள்.'

உண்மை.

மரணத்தை
யசோதரன்
ஆயுதமாக்கினான்.



www.tamilarangam.net

### ஈழத்தமிழர் விடுதலைப் போரில்:

# ராஜீவ் அரசின் சுயநலப் போக்கும் ஐந்தாம் படைகளின் துரோகங்களும்

"ஈழத் தமிழர்கள் உரிமைப் போராட்டம் முன்னர் எப்பொழுதும் இல்லாததை விட, உத்வேகம் அடைய வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

எந்த ஒப்பந்தமும் பயன்தரப் போவதில்லை என்ற பழைய பாடத்தைப் புதிதாகச் சிந்தையில் செறித்து, எல்லோரும் ஒன்றுபட்டு உரிமைப் போரைச் சக்திமிக்கதாக்க வேண்டிய அவசரம் உருவாகியுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகளில், முதன்மையானது, மூலஸ்தானம் போன்றது இலங்கை நாட்டில் தமிழர்களுக்கு என்று ஒரு தாயகம் உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே. வடக்கும், கிழக்கும் இணைந்த பிரதேசங்கள் தமிழர்கள் நிரந்தரமாக வாழும் பகுதி என்பது வரலாறு; நடைமுறையிலும் இருந்த ஒன்று.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைந்தபோதெல்லாம், முயற்சி எடுத்த வேளை எல்லாம், வடக்கு - கிழக்கு இணைந்த தாயகமும், அப்பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதும் இடைவிடாது வற்புறுத்தப்பட்டவை.

ஆனால் அவை செயல்வடிவம் பெறவில்லை. மாறாக சிறீலங்கா அரசுகளின் சதிநாசமான அரசு ஆதரவுக் குடியேற்றத் திட்டங்கள், 'அல்லையில் தொடங்கி இப்போது வெலிஓயாவில் வந்து நிற்கின்றன. (முற்றாக முடிந்து விட்டதாகச் சொல்வதற்கில்லை).

சிறீலங்கா அரசாங்கங்கள் நிலைநாட்டிய பல பெரிய குடியேற்றத் திட்டங்களில் வெலிஓயா தனித்தன்மையது; தமிழர்களின் முதன்மை உரிமைக்கு முற்றாக முட்டுக்கட்டை, தடைக்கல் போடுவது என்பதை உணர்ந்து கொள்ளுதல் முக்கியம்.

வடக்கு - கிழக்கு தொடர் நிலப்பரப்பை முக்கிய—கேந்திர—இடத்தில் வைத்து வெட்டிவிடும், துண்டாடிவிடும் ஆபத்து நிறைந்தது.

அதனால்தான் ஜே. ஆர். அரசு தனது சதியை வெகு இரகசியமாகவும், சாதுரியமாகவும் செய்து—

மகாவலிப் பிரதேச விஸ்தரிப்பு என்ற பெயரில் 43 தமிழர் கிராமங்களைப் பறித்து எடுத்து, 13,500 தமிழ்க் குடும்பங்களை நிர்ப்பந்தமாக வெளியேற்றி—

அவர்களின் 75,000 ஏக்கர் நிலத்தையும் சுவீகரித்து அதில் 15,000 சிங்களக் குடும்பங்களைக் கொண்டுவந்து குடியேற்றி—

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர், 15-4-1988-இல் விசேட வர்த்தமானி மூலம் அதனைச் சிறப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி எல்லை விவரங்களையும் வெளியிட்டு விட்டு—வெகு அமைதியாக இருந்துவிட்டது. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை, முதன்மை உரிமையைப் பறிக்க வெகு சாதுரியமாகக் கருமமாற்றிவிட்டு அமைதியாக இருந்துவிட்டது.

உண்மை எப்போதாவது அம்பலத்துக்கு வரும் என்பதற்கு ஒப்ப விஷயம் தெரியவந்ததும் தமிழர் தரப்பில் இயன்றவரை ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. ''துண்டாடல் வேண்டாம்'' என்று இப்பத்தியிலும் 18-9-1988 இதழில் இடித்துரைத்தோம்.

ஜே. ஆர். அரசுக்கு, அவை எல்லாம் 'எருமை மாட்டின்மேல் பெய்தமழை' ஆயிற்று. அது கருமமே கண்ணாக இருந்து மணல் ஆற்றை வெலிஓயா ஆக்கி, அதனை ஒரு மாவட்டமாகஉருஅமைத்து செயல் வடிவம் கொடுத்து முடுக்கிவிட்டிருக்கிறது!!

இல்லையெனில், அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட அறிவித்தல் ஒன்றில் வெலிஓயா மாவட்டம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது எவ்வண்ணம்? பிரேமதாச அரசும் ஆசாடபூதிப் பூசாரித்தனத்தில் இறங்கிவிட்டதா?

புதிய மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட்டால் அது வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதே நடைமுறை. ஆனால் வெலிஓயா மட்டும் மூடுமந்திரமாக வைக்கப்பட்டது ஏனோ? எதற்காகவோ?

வடக்கு - கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கத் தேர்தல் நடத்தவேண்டும் என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடாப்பிடியாக நிற்கும் அரசு, மக்கள் தீர்ப்பு ஆதரவாக அமையலாம் என அஞ்சி, வெலி ஓயாச் சதியைப் பூரணமாக்கிவிட்டதா?

தனி ஒருவனது வீட்டுக்குள் அடுத்தவன் அத்துமீறிப் பிரவேசிப்பது 'கிறிமினல்' குற்றம். ஆனால் தமிழர்களின் பாரம்பரிய மண்ணில் சிங்கள அரசு அத்துமீறிப் பிரவேசிப்பது மட்டுமன்றி, நிரந்தரமாக வசித்தவர்களை விரட்டி அடித்துவிட்டு, அவனது நிலத்தையும் பறித்துக் கொள்கிறது என்றால் அது எவ்வகையான குற்றமாக இருக்கவேண்டும்?

அரசாங்கமே அத்துமீறல் நடத்தி, தமிழர் தாயகக் கோட்பாட்டுக்குக் குந்தகம் விளைவித்து, வடக்கையும், கிழக்கையும் செயற்கையாகத் துண்டாடிவிடச் சதிசெய்தால், தமிழர்கள் கைகட்டி, வாய்பொத்தி மௌனிகளாக இருக்க முடியுமா?

அதனாலேயே ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் உத்வேகம் அடையவேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டிருப்பதாக முதலில் குறிப்பிட்டோம்.

ஒன்றுபட்ட உரிமைப் போராட்டம், பல முனைப்பட்டதாக இருக்கவேண்டும், தமிழர்கள்மீது அடக்குமுறை மட்டுமல்ல, அத்துமீறல்களும் நடத்தப்படுகிறது என்பது முழு உலகத்திற்கும் எடுத்துச் சொல்லப்படுதல் அவசியம். வெலிஓயா விடயத்தில் வெறும்வாய் மெல்லுவோமேயானால், எமக்கு மீட்சி இருக்க முடியாது. இதுவரை வந்த உயிர், உடைமை, அழிவு ஆபத்துக்களைவிட, இது மிகப் பெரிய ஆபத்து என உணர்ந்து எல்லோரும் கருத்தொருமித்து உழைக்கவேண்டும்.''


இது தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறைகூவல் அல்ல. தமிழீழத்திலிருந்து வெளியாகும் தமிழ்ச் செய்தி நாளிதழ் ஒன்று தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கம்தான் இது.

> ''ஈழத் தமிழர் பிரச்சினைகள் அனைத்தையும் நாம் வந்து தீர்த்துவிட்டோம். தமிழ்ப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டிவிட்டோம். தமிழ் மக்களுக்கென ஒரு ஆட்சியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். அந்த ஆட்சியைக் காப்பாற்ற ஒரு படையையும் (C. V. F.) ஏற்படுத்திப் பயிற்சி அளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அந்தப் பணி முடிந்ததும் விரைவில் தமிழீழத்தை விட்டுத் திரும்பிச் சென்று விடுவோம்.''

என்று தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட தமது பிரச்சார சாதனங்களின் மூலம் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மூடி மறைத்து மூச்சுக்கு மூச்சு கோயபல்ஸ் பாணியிலான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ள இந்திய அமைதிகாக்கும் படையினரின்,

கெடுபிடிகள், இடையூறுகள், தலையீடுகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழான ''உதயன்'' கடந்த 17-4-89 அன்று மிகவும் துணிச்சலாக மேற்படி தலையங்கத்தைத் தீட்டியுள்ளது.

இத்தலையங்கத்தின் மூலம் ''ஈழத் தமிழர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடவில்லை. எந்த ஒப்பந்தமும் (இலங்கை-இந்திய ஒப்பந்தம் உட்பட) பயன்தரப் போவதில்லை. ஈழத் தமிழர்களின்




நன்றி THE WEEK

## பெருமாளுக்கு பட்டைநாமம்

இலங்கை அரசு மாகாண சபைகளுக்கு தான் வழங்குவதாகக் கூறிய, -வரதராசப்பெருமாளால் எதிர்பார்க்கப்பட்ட- அதிகாரங்களெதையும் வழங்காது அனைத்து அதிகாரங்களையும் தானே வைத்துக் கொண்டு வரதராசப் பெருமாளுக்குப் பட்டை நாமம் சாத்தியுள்ளது.

www.tamilarangam.net



## நிவாரணமா? நிர்மூலமா?

நீண்ட காலமாக ஈழத் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களை நீக்கி, தமிழீழத்தில் அமைதியை நிலைநாட்டி, அவர்களுக்காக ஒரு அரசையும் அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டவும் புனர்வாழ்வுக்கும் நிவாரண உதவி வழங்கிவருவதாக இந்திய அரசு விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அதே நேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளைத் தேடுகிறோம் என்று கூறி இந்தியப்படை மேற்கொண்ட நடவடிக்கைகளில் நூற்றுக்கும் அதிகமான தமிழீழ மக்களின் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ள செய்தியும் ஒருபுறம் வந்துகொண்டிருக்கிறது.

உரிமைப் போராட்டம் முன்னெப்பொழுதும் இல்லாததைவிட உத்வேகம் அடைய வேண்டிய அவசர, அவசியம் ஏற்பட்டிருக்கிறது'' என்று உதயன் பத்திரிகை விடுத்துள்ள அறைகூவலானது இந்தியப் படைகள் செய்துவரும் பிரச்சாரங்கள் அனைத்தையும் பொய்யென அம்பலப் படுத்துவதுடன், ஈழத் தமிழர்கள் முன் எப்பொழுதையும்விட உத்வேகத்துடன் போராட வேண்டிய ஆபத்தான நிலையில் இருக்கின்றார்கள் என்பதையும் அதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திவரும் போராட்டம் நியாயமானது என்பதையும் உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தற்பெருமை, பதவி ஆசை, பொறாமை, காழ்ப்புணர்ச்சி, பயம், பச்சோந்தித்தனம் இவற்றுக்கு ஆட்பட்டு தம்மைத்தாமே போராளிகள் என்றும் விடுதலை இயக்கங்கள் என்றும் அழைத்துவந்தவர்கள் எல்லாம் இந்தியாவின் ஒப்பந்தம் சரியானது என்றும் அதை நடைமுறைப்படுத்தினால் தமிழர் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றும் இன்று ''ஒப்புக்கு ஒப்பாரி'' பாடிக்கொண்டிருக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமே இன்று தமிழீழக் களத்தில் நின்று ஒப்பந்தத்தை முற்றாக நிராகரித்து இந்திய இலங்கை அரசுகளின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பொம்மை ஆட்சியாளர்கள்கூட ''மாகாண சபைக்கு எதுவித அதிகாரங்களும் வழங்கப்படவில்லை; ஒப்புக்குத்தான் இருக்கிறோம்; செயற்பட முடியவில்லை'' என்று ஒப்பாரிபாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதியை நிலைநாட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கவே மாகாணசபையை ஏற்றோம் என்று இதுவரை ஈ.பி.ஆர்.எல்.எப்-இனர் கூறிவந்தனர்.

ஆனால் இன்று பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிவாரணத்துக்கென வெளிநாடுகள் கொடுத்துதவிய உதவிகள் அனைத்தும் தமிழர் பகுதிகளுக்கு ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட உதவிகள்கூட வடகிழக்கு மாகாணசபை அரசுக்குத் தெரியாமல் மாகாண புனர்நிவாரண அமைச்சரைக் கலக்காது மத்திய அரசே மத்திய அமைச்சர்களே நேரடியாகக் கொடுத்துவருகின்றனர் என்று மாகாண சபை புனர் நிவாரணத்துறை அமைச்சர் கணேசலிங்கம் புலம்பியிருக்கின்றார்.

இலங்கை இராணுவத்தில் தமிழர்களைக் கொண்ட தமிழ் ரெஜிமண்ட் அமைக்க இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா உறுதியளித்திருக்கிறார் என்று இலவுகாத்த கிளியானார் வடகிழக்கு மாகாணசபையின்பிரதி முதல்வர் கிருபாகரன்.

ஆனால் இன்று அதுபற்றிய பேச்சே எழாத நிலையில் வடகிழக்கு மாகாணசபையின் பாதுகாப்புக்கென அமைக்கப்படும் மக்கள் தொண்டர் படையில் இன விகிதத்துக்கேற்ப சிங்களவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என மத்திய அரசு உறுதியாகக் கூறிவிட்டது.

அதனால் மாகாணசபையால் உருவாக்கப்படும் மக்கள் தொண்டர் படையில் ஏராளமான சிங்களவர்கள் (பெண்கள் உட்பட) சேர்க்கப் படுகின்றனர்.

''இலங்கை இராணுவத்தில் நாட்டின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப தமிழர்கள் சேர்க்கப் பட்டால்தான் மாகாணசபை மக்கள் தொண்டர்படையில் சிங்களவர்கள் சேர்க்கப் படுவார்கள். இல்லையேல் தொண்டர்படையில் சிங்களவர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள்'' என்று கூறும் துணிச்சல் இல்லாத சுயநலமும், பதவி வெறியும் கொண்ட பச்சோந்திகள் கூட்டம் மாகாணசபையின் பதவி நாற்காலிகளில் குந்தியிருப்பதால் தமிழீழப் பகுதியில் சிங்களப்படை உருவாக்கப்படுகிறது.

பதவியேற்றவுடன் தன்னிடம் எல்லா அதிகாரங்களும் இருப்பதாக பாவனை காட்டி மாவட்ட ஆட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து மாநாடு கூட்டிப் பேசி தனது மேதாவிலாசத்தைக் காட்டினார் வடகிழக்கு மாகாணத்தின் ''பெருமுதல்வர்'' வரதராஜப் பெருமாள்.

(தொடரும்)

www.tamilarangam.net



மருமகன் பஞ்சாட்சரத்தின் நெஞ்சில் துப்பாக்கியை வைத்து வெறியர்கள் சுடுவதைப் பார்த்த புவனேசுவரி கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

'அவன் அம்மன் கோயில் குருக்கள் பாருங்கோ...... அவனைச் சுடாதேயுங்கோ......' என்று கெஞ்சியும் பலனில்லாமல் போயிற்று. கணவனை இழந்தவளாய் 'அம்மா!' என்று கதறிக்கொண்டே தன் தோளில் சாய்ந்த மகள் ஜெயந்தியைக் கையால் பற்றிப் பிடித்தபடி வானம் இடியக் கத்தினாள் அவள்.

கீரிமலைக் கேணியைத் தெரியாதவர்கள் இல்லை. கேணியாலேயே கீரிமலைக்குப் புகழ். யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் இந்தக் கேணியில் நீராட மக்கள் வருகிறார்கள்.

ஆங்காங்கே நெடிய பனை மரங்கள். ஒரு பக்கம் நீலம் காட்டும் கடல். கீரிமலை அழகான ஊர்.

புவனேசுவரியின் வீடு கடலின் ஓரத்தில் கீரிமலையில்தான். செல்வாக்கான குடும்பம். புவனேசுவரி படித்தவள். விதவை. நாற்பத்தெட்டு வயது ஆகிறது. இரண்டு பெண் தாள். புவனேசுவரிக்குத் தலையே வெடித்துவிடும்போல் இருந்தது.

★

முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நினைவு.

1958-ஆம் ஆண்டு சிங்கள இனவெறியர்கள் தமிழ்க் குழந்தைகளைக் கொதிக்கும் 'தார்ப் பீப்பா'க்களில் போட்டுக் கொன்றதும் வீடு வீடாகத் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்ததும் கொடிய சேதிகளாகிக் கொண்டிருந்தபோது புவனேசுவரிக்குப் பதினெட்டு வயது தான்.

# எங்கள் கடல் செந்நீராகிறது....

மாரி காலக் கொடுங்காற்றில் கடலின் அலைகள் வெறி பிடித்துக் கூத்தாடின. அமைதியான கீரிமலைக் கடற்கரையில் 6-11-87 காலை 8 மணிக்கெல்லாம் அந்த வெறிக் கும்பலின் மனித வேட்டை தொடங்கிற்று.

ஜெயந்தியின் தங்கச்சி வசந்தி நடுங்கி ஒடுங்கிப் போனாள். சில்லென்ற குளிர் காற்றில் கூட உடல் வியர்த்துக் கொட்டியது. அவர்களை வளைத்து ஐம்பது இந்தியப்படை முரடர்கள்.

தாயையும் - அந்த இரண்டு பெண்பிள்ளைகளையும் வீட்டுக்குச் செல்லுமாறு ஒரு வெறியன் கொச்சை ஆங்கிலத்தில் கத்தினான்.

அவர்கள் வீடு நோக்கி நடந்தார்கள்......

கூடவே அந்த முரட்டுக் கும்பலும்......

★

பிள்ளைகள் - மூத்தவள் ஜெயந்திக்கு 22 வயது. வசந்தி இரண்டு வயது இளையவள். ஒரு மகன் இருக்கிறான் - உடல் ஊனம்......மூளை வளர்ச்சி இல்லை. எதையாவது புலம்பிக் கொண்டிருப்பான். ஜெயந்திக்கு அண்மையில்தான் திருமணமாகி.. அதற்குள்...

பஞ்சாட்சரத்துக்கு அம்மன் கோயிலில் குருக்கள் வேலை. பிள்ளைகள் யாரையாவது படை ஆட்கள் பிடித்துக் கொண்டு போனால் தாய்மார்கள் அழுது அடித்துக்கொண்டு கோயிலுக்கு ஓடுவார்கள். எத்தனை பூக்களை அம்மனுக்குப் போட்டிருக்கிறான்......எல்லோரையும் காப்பாற்ற அம்மனுக்கு அர்ச்சனை செய்த பஞ்சாட்சரத்துக்கே இன்று கதை முடிந்துவிட்டது.

ஜெயந்தி அழுதுகொண்டே படைக்கும்பலுக்கு நடுவில் நடந்

வரலாற்றில் தமிழீழத்தின் தன்மான உணர்வைத் தூண்டிவிட்ட முதல் நிகழ்வுகள் அவை.

கொடுமைக்கு வேர் முளைக்கத் தொடங்கிய காலம்.

நன்றாக நினைவிருக்கிறது.

சிறிலங்காவின் தலைநகரான கொழும்புக்குத் தெற்கே பாணந்துறை என்ற சிங்கள ஊரில் ஒரு பழைய சைவக் கோயிலில் குருக்களைச் சிங்கள வெறியர்கள் மூலஸ்தானத்தில் வைத்தே எண்ணெய் ஊற்றி உயிரோடு எரித்துச் சாம்பலாக்கினார்கள்.

'கடவுளே இல்லையா?' என்று அப்போது புவனேசுவரி வீட்டில் எல்லோருமே பேசிக்கொண்டது இன்றும் அவள் நினைவில் அழியவில்லை.

தீவைத்தவர்கள் பௌத்த சிங்கள வெறியர்கள்.

www.tamilarangam.net



ஆனால்—

முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு இன்று......இந்து சமயத்தின் பாதுகாவலர்கள் அல்லவா அம்மன் கோயில் குருக்களைப் பிணமாக்கிப் போட்டிருக்கிறார்கள்.

புவனேசுவரியின் நெஞ்சில் மருமகன் பஞ்சாட்சரத்தின் நினைவு அலையாய்ப் புரண்டது......

இந்தியாவுக்குப் போகவேண்டும் என்று அவனுக்குச் சரியான ஆசை. வேதங்களையும் உபநிடதங்களையும் ஆக்கிய மகான்கள் - நாயன்மார்கள் - ஆழ்வார்கள் - ஆதிசங்கரர் - பகவான் இராமகிருஷ்ணர் - விவேகானந்தர் - ரமணமகரிஷி ஆகியோரை எல்லாம் ஈன்ற இந்து மதத்தின் அந்தப் புனித மண்ணை மிதித்துவிட வேண்டும் என்று ஆவலாக இருந்தான்......

ஆனால்—

அந்த 'இந்து மகா பூமி'யே இன்று அவனைக் கொன்றுவிட்டது.

பாணந்துறைக் கோயில் குருக்களை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கொன்ற சிங்கள பௌத்த வெறியர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்ற வந்தவர்களாம் பஞ்சாட்சரக் குருக்களைக் கொன்ற பாரதத்தின் இந்துமதப் புண்ணியவான்கள்......

புவனேசுவரி பற்களைக் கடித்துக்கொண்டாள்.

★

புவனேசுவரியின் கூந்தலைப் பிடித்து இழுத்து வீட்டினுள்ளே முரட்டுத்தனமாகத் தள்ளினான் ஓர் இரக்கமற்ற தடியன்.

இரண்டு பெண்களும் நடுங்கிக் கொண்டே பின்னால் போனார்கள்.

வாசலில் மனவளர்ச்சியற்ற அந்த ஊனப்பிள்ளை கைகளைத் தட்டித் தன் பாட்டில் சிரித்துக் கொண்டிருந்தான். அந்த அப்பாவியை ஒரு விலங்கு இரும்புச் சப்பாத்தால் உதைத்துக் கீழே தள்ளிற்று.

'நகைகளை எங்கே வைத்திருக்கிறாய் - எடு!'

அரைகுறை ஆங்கிலத்தில் புவனேசுவரியை நோக்கி ஓர் அதட்டல். நல்ல ஆங்கிலத்திலேயே அவள் பதில் சொன்னாள்:-

''நாங்கள் பெரிய பணக்காரர்களல்ல. எங்களிடம் அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை.''

அவர்கள் 'ஓ!' என்று சிரித்தார்கள்.

வீடு அமளிதுமளி ஆயிற்று. அலமாரி - பெட்டி - மூட்டை முடிச்சுகளெல்லாம் உடைந்து - கிழிந்து சிதறின.

புனித இந்தியப்படையின் பைகளில் பாதி நிரம்பிற்று......

★

ஊரில் எப்போதுமே புவனேசுவரிக்கு மரியாதை உண்டு. செல்வாக்கு உண்டு. கணவன் உயிரோடு இருந்தபோது - ஜெயந்தியும் வசந்தியும் சின்னஞ் சிறிசுகளாக இருந்த காலத்தில் சேர்த்து வைத்ததில் ஏதோ கொஞ்சம் வசதியும் உண்டு.

கணவன் இறந்தபின்பு காலத்தை எப்படியோ ஓட்டி விட்டாள். புவனேசுவரியின் வீடு ஓரளவு மகிழ்ச்சியாகவே இருந்தது.

சிங்கள வெறியர்கள் காலத்தில் பலாலி முகாமிலிருந்து வீசப்படும் 'செல்' குண்டுகளின் இடி ஓசை அடிக்கடி கேட்கும்.

ஆனால்—

சிங்களப்படை நகருக்குள் நுழைய விடுதலைப் புலிகள் விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை யாழ்ப்பாண மக்கள் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்ததால் யாரும் அந்த ஓசையைப் பொருட்படுத்துவதில்லை.

பக்கத்து வீட்டுத் தம்பித்துரை சேதி சேதியாகக் கொண்டு வருவார். நல்ல மனிதர். எல்லோரும் அவரை வளைத்து உட்கார்ந்துகொள்வார்கள். வீடு நிறைந்தாற் போல் இருக்கும்.

தம்பித்துரை - தம்பித்துரையின் மனைவி சிறீதேவி - பெண்பிள்ளைகள் சிவாஜினி, சுபாஜினி, இரண்டு பெடிகள் தவநேசன், கோணேஸ், அவர்களுடைய கைக்குழந்தை எல்லோரையுமே புவனேசுவரி வீட்டில் பார்க்கலாம்.

இரண்டு குடும்பங்களும் ஒரே வீடுமாதிரித்தான்.

ஜெயந்தி அக்காவோடும், வசந்தி அக்காவோடும் தம்பித்துரையின் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம். புவனேசுவரியும், சிறீதேவியும் முன்கூடத்தில் பேசிக்கொண்டிருப்பார்கள். தம்பித்துரையின் கைக்குழந்தை ஊனப்பிள்ளைக்குப் பக்கத்தில் போய் விளையாடும். கோணேசும், தவநேசனும் வசந்தி அக்காவோடு கீரிமலைக் கடற்கரையைச் சுற்றி வருவார்கள்......


பஞ்சாட்சரம் அம்மன் கோயில் பூசை முடிந்து வீட்டுக்கு வந்தால் ஜெயந்திக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து விடுவான். கீரையை அரிந்து கொண்டே அவனோடு ஜெயந்தி இனிக்க இனிக்கப் பேசுவது புவனேசுவரியின் மனதை நிறைக்கும்.

''நீ கீரையை வெட்டுறதைப் பார்த்தாலே சாப்பிட்ட மாதிரி இருக்குது ஜெயந்தி'' என்பான் பஞ்சாட்சரம்.

''சுலோகம் போடுற வேலையை அம்மனோடு வச்சுக்

www.tamilarangam.net





கொள்ளுங்கோ...'' என்று கூறிக் 'கிளுக்'கென்று சிரிப்பாள் ஜெயந்தி.

மகிழ்ச்சியான காலங்கள்.

இந்தியப்படை நுழைகின்ற வரை......

★

6-11-88 காலையில்தான் புவனேசுவரியின் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு அவர்கள் உள்ளே பாய்ந்தார்கள்.

புவனேசுவரியையும்-இரண்டு பெண்களையும் - பஞ்சாட்சரத்தையும் அந்தக் கும்பல் கடற்கரைக்கு இழுத்துக்கொண்டு போயிற்று.

கடற்கரையில்—

பஞ்சாட்சரத்தின் உயிரை வாங்கிவிட்டு புவனேசுவரியின் வீட்டைக் கொள்ளையிடத் திரும்பவும் அவளையும் பிள்ளைகளையும் துப்பாக்கி முனையில் தள்ளிக்கொண்டு வந்தார்கள்.

இப்போது—

சுருட்டுவதையெல்லாம் சுருட்டி ஆயிற்று.

வெளியே தெருவில் 'ஜீப்' வண்டியில் பறந்த வெள்ளைக் கொடியைக் கழற்றி - உள்ளே எதையோ மூடி மறைத்து முடிச்சுப் போட்டான் ஒருவன்.

ஒரு விதவையின் வீட்டை மொட்டை அடித்து முடித்த திருப்தி.

'இனி கடற்கரைக்குப் போகலாம்...' என்று மீண்டும் கொச்சை ஆங்கிலத்தில் கத்திக் கொண்டே புவனேசுவரியின் தோளில் ஓங்கித் துப்பாக்கியால் அடித்தான் ஒரு முரட்டு ஆசாமி.

நடுங்கிக்கொண்டே கடற்கரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள்......

கடற்கரை நெருங்க நெருங்க-பஞ்சாட்சரம் சுருண்டு கிடப்பது தூரத்தில் தெரியத் தெரிய-ஜெயந்தி தாயின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு தேம்பினாள். சற்றுத் தள்ளி வேறு யாரோ விழுந்துகிடப்பது போலத் தோன்றியது. கூடிய எண்ணிக்கையில் இந்தியப் படைக் கும்பல் கடற்கரையில் குவிந்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பக்கத்தில் வந்து பார்த்தபோதுதான் தெரிந்தது...அது...அது தம்பித்துரையின் பிணம்.

சிறீதேவி கைக்குழந்தையோடு வெறி பிடித்தவளாய்க் கதறிக் கொண்டிருந்தாள். சிவாஜினியும், சுபாஜினியும் 'அப்பா, அப்பா!' என்று புழுவாய்த் துடிக்கிறார்கள்.

கோணேசும், தவநேசனும் தம்பித்துரையின் கையைப் பிடித்து இழுப்பதும்...அழுவதுமாய்......

ஓ! எத்தனை கொடிய உலகம்! ஹிட்லர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறானா? நீதி எங்கே? வெறித்தனத்துக்கு எல்லையே இல்லையா?

தன் கண்களுக்கு முன்னாலேயே ஜெயந்தியையும், வசந்தியையும் முரட்டுத்தனமாகச் சேலை களைந்து அந்த வெறியர்கள் நிர்வாணமாக்கிய போது - தாயாக அல்ல - ஒரு குழந்தையாக முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குலுங்கி அழுதாள் புவனேசுவரி.

ஒரு முரடனின் இரும்புக் கைகள் ஜெயந்தியை ஆவேசமாகப்பற்றி இழுத்து எறிந்தன.

'போடி உன் புருஷனைப் போய்த் தழுவு'.

அதற்குள்......

ஜெயந்தியின் இரண்டு தொடைகளுக்கும் நடுவில் துப்பாக்கியை வைத்து இன்னொரு பாவி தமிழனின் மானத்தையே சுடுவதுபோல...

பிணமாய்ச் சுருண்ட ஜெயந்தியின் மேல் 'அக்கா!' என்று கதறிக்கொண்டே ஓடிப் போய் விழுந்தாள் வசந்தி.

www.tamilarangam.net



அவளுக்கும் அதே இடத்தில் துப்பாக்கிக் குண்டுகள்......

வசந்தியின் இரத்தம் சிறிப் பாய்ந்து புவனேசுவரியின் நெஞ்சில் அடித்தது. சின்னக் குழந்தையாக இருந்தபோது எந்த முலைகளால் அந்தப் பிள்ளைக்குப் பாலூட்டி இரத்தம் பாய்ச்சினாளோ - அதே இரத்தம் இப்போது இவள் முலையை இடித்து 'ஏனம்மா என்னைத் தமிழச்சியாக வளர்த்தாய்?' என்று நியாயம் கேட்கிறது.

புவனேசுவரி மயங்கி விழுந்தாள்.

கீரிமலைக் கடல் ஆவேசமாக இரைந்து கத்தியது. கரையின் நீள அலைகள் பிணங்களை நனைத்து மீள்கின்றன...... தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள்......

கண்களை மெதுவாகத் திறந்தபோது - அந்த மனித விலங்குகள் சிறீதேவியைச் சுட்டுப் பிணமாக வீழ்த்துவதையும் - அவள் கையிலிருந்து விழுந்த பிஞ்சுக் குழந்தை அலைக்கு நடுவில் - 'ம்மா......' என்று கத்துவதையும் புவனேசுவரி கண்டாள்.

அடுத்த நொடியில்—

ஜெயந்தியும், வசந்தியும் கொல்லப்பட்டது போலவே தம்பித்துரையின் இரு பெண் பிள்ளைகளும் அதே விதமாக நிர்வாணமாக்கப்பட்டு - அதே விதமாக......எத்தனை கொடிய நிகழ்வுகள்......

இரண்டு துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டன...... புவனேசுவரி நிலத்தில் கிடந்தபடியே ஓரக் கண்களால் பார்த்தாள்......ஒன்று கோணேஸ் - அடுத்தது தவநேசன்.

புவனேசுவரி செத்தவள் போலவே படுத்துக் கிடந்தாள். தன்னை இந்தியப்படைக் கும்பல் மறந்துவிட்டது என்பதைஅவளால்உணரமுடிந்தது. மணலில் ஏறும் கடல் அலையின் அசைவுக்கு ஏற்பத் தலையை ஆட்டியபடி தன்னையும் ஒரு சடலம் போலவே ஆக்கிக் கொண்டாள் அவள்.

காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அலைகளின் வெறித்தனமான இரைச்சலும்- இடையிடையே அந்தப் பிஞ்சுக் குழந்தையின் ஓலமும் கேட்டது. கொஞ்ச நேரத்தின் பின்பு...

மீண்டும் ஒரு துப்பாக்கி வேட்டோசை. குழந்தையின் அழுகை நின்றது. அதே வேளை அந்தப் பெரிய மனிதர்களின் சிரிப்பொலி... ஜீப்' வண்டிகள், 'ட்றக்குகள்' முதலியவற்றின் கொடிய இரைச்சல்...அவர்கள் கடற்கரையை விட்டுச் செல்கிறார்கள்.

புவனேசுவரி இரவுவரை அப்படியே கிடந்தாள்......

அவளைத் தாண்டி - அந்தப் பிணங்களை நோக்கி நண்டுகள் ஊர்கின்றன....... ★

---

இந்திய அரசு தமிழருக்கு
பெற்றுக் கொடுத்த

## மாகாணசபை அதிகாரம் - 1

'வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கென ஒரு மக்கள் தொண்டர் படை (CVF) அமைத்துக் கொண்டிருக்கிறோம்' என்று அடிக்கடி வரதராஜப் பெருமாள் சொல்கிறார்.

தமிழ் ஈழத்துக்கு ஒரு தனிப்படை அமைப்பதைப் போலக் காட்டும் முயற்சி.

ஆனால்,

உண்மை நிலை என்ன?

'Lanka Guardian' பிப்ரவரி 1, 1989 இதழில் வெளியாகியுள்ள சேதி இதுதான்—

''இடைக்கால அரசின் தகவல் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா விரைவில் எல்லா மாகாணங்களிலும் மக்கள் தொண்டர்படை அமைக்கப்படும் என்று கூறினார்.

பாதுகாப்பு அமைச்சு இப்படிச் சொல்லுகிறது:-

10,000 இளைஞர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் மக்கள் தொண்டர் படையாய் அமைக்கப்படுவார்கள். இந்தப் படைகள் சிறீலங்காவின் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குக் கீழே இயங்கும்.''

ஆம்—

வரதராஜப் பெருமாளுக்குக் கீழே அல்ல—
சிங்களப் போலீஸ் மா அதிபருக்குக் கீழேதான் வட - கிழக்கு மக்கள் தொண்டர்படை இயங்கியாக வேண்டும்.

புரிகிறதா?

வரதராஜப் பெருமாள் கையில்
தொண்டர் படை நிர்வாகப் பொறுப்பு இல்லை...
படை இங்கே—
குடுமி அங்கே.

www.tamilarangam.net



# 'நாங்கள் கொல்லப்படலாம்...'

அன்புள்ள Chriss Nattal

இங்குள்ள 76 கைதிகளின் சார்பில் உங்களுக்கு X'Mas & New year வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

மரணத்தின் விளிம்பில் இருந்து இக் கடிதத்தை எழுதுகிறேன். இந்தக் கடிதம் வெளி உலகத்திற்குத் தெரியவந்த பின் இது எனது மரண சாசனம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் ஈழத்தில் உள்ள எமது தோழர்களிடம் விடுதலை செய்யப் போவதாகக்கூறி 1988 10-09 அன்று அதிகாலை 1-30 மணியளவில் சென்னை மத்திய சிறைச்சாலையில் N. S. A. யின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நாங்கள் 84 பேரை Deputy Cmmissioner ராதாகிருஷ்ணன் "Q" Branch S. P துர்க்கையாண்டி Intelligence Bureau additional S. P. அன்ரனி "Q" Branch additional S. P. செஞ்ஜ் Research & analysis wing(Raw) S.I. நாயர் ஆகியோர் தலைமையின் கீழ் வந்த தமிழகப் போலீஸ் படையினர் தாம்பரம் IAF Camp இற்கு அழைத்துச் சென்றனர். அங்கே I. B யின் Inspector General திரு. சரணியன், திரு. K.V.S. மூர்த்தி (SP) ஆகியோர் எம்மைச் சந்தித்தனர். எம்மை உடனடியாக எமது தோழர்களிடம் ஒப்படைப்பதாக உறுதி அளிக்காதபட்சத்தில் நாம் அங்கு சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொள்வோம் என்று கூறினோம். எம்மை உடனடியாக தமிழீழத்தில் உள்ள எமது தோழர்களிடம் ஒப்படைப்பதாக வாக்களித்து எம்மிடம் உள்ள சகல சயனைட் வில்லைகளையும் வாங்கினர். "பாதுகாப்புக் காரணங்களுக்காக" எமது கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் (கை, கால் இழந்தவர்கள் உட்பட) ஐந்து விமானங்களில் ஏற்றப்பட்டோம். எம்மை எமது தோழர்களிடம் ஒப்படைப்பதற்கு வருவதாகக் கூறி IB-SP அழகர்சாமி "Q" Branch SP துர்க்கையாண்டி Raw SI நாயர் ஆகியோர் எம்முடன் வந்தனர்.

பலாலி விமான நிலையத்தில் BRIG பாலகிருஷ்ண ரெட்டி



ரகீம்

COL அப்துல் காதர் (Civil affairs) ஆகியோர் சந்தித்தனர். திரு. கிட்டு நான் உட்பட 7 பேர் காங்கேசன் துறையிலுள்ள Rehabilitation Camp இல் உள்ள ஒரு வீட்டில் CAP சந்துரு என்பவரின் காவலின் கீழ் வைக்கப்பட்டோம். ஏனையோர் பருத்தித்துறை Hartly College இலுள்ள பூரணம் பிள்ளை Block இல் காவலில் வைக்கப்பட்டனர். இந்தப் பருத்தித்துறை இராணுவ முகாமின் இராணுவக் குறியீடு 56 APO.

காங்கேசன்துறையில் எம்மை மேஜர் ரவிநாயர் (MI) மேஜர் லலித்நாத் Lt கேணல் கய் 2nd Lt வாஸ் 2nd Lt சிறிவஸ்தவ ஆகியோர் சந்தித்தனர். 10-10-88 அன்று மேஜர் Gen சந்தேஷ் பாண்டே, Brig B. ரெட்டி ஆகியோர் எம்மைச் சந்தித்தனர். Maj Gen பாண்டே எம்மையும் தமிழக பாராளுமன்ற உறுப்பினர் V. கோபால்சாமியையும் பலமாகத் தாக்கிப் பேசினார். நான் ஒழுங்காக இருக்காவிடில் என்னைக் கொல்லப் போவதாகவும் மிரட்டினார். 12-10-88 அன்று திரு. கிட்டு உட்பட 09 பேர் விடுதலை செய்யப்பட்டனர். (K.K.S.இல் கைதி இல. 1365) 13-10-88 அன்று மாலை விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்ட என்னுடன் இருந்த சிறி (கைதி இல. 1366) CAPபோல் ஜோர்ஜ் (MI) என்பவரால் தாக்கப்பட்டார். (12-ம் திகதி மதியத்திலிருந்து 14-ம் திகதி மதியம் வரை) காற்றோட்டம் இல்லாத இருட்டறையில் பூட்டப்பட்டோம். 14-10-88 அன்று K. K. S. இல் இருந்த நாம் ஐவரும் ஒன்றாகக் கட்டப்பட்டு பலாலிக்கும் அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் பருத்தித்துறை Hartley College முகாமிற்கும் அழைத்துச் செல்லப்பட்டோம்.

இந்த முகாமிற்கு கேணல் சுக்சுந்தர் சிங் (CMP) மேஜர் அனில்ராய்னா (ஜம்மு காஷ்மீர் தலைநகரம் சிறீநகரைச் சேர்ந்தவர்) மேஜர் சந்திரநாத், மேஜர் வேணுகோபாலன் (கர்நாடகாவைச் சேர்ந்தவர்) ஆகியோர் பொறுப்பாக இருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(எனக்கு இங்கு கொடுக்கப்பட்ட கைதி இல. 80) 15-10-88 அன்று வடமராட்சிக்குப் பொறுப்பாக V. V. T இல் இருந்து இயங்கும் பிரிகேடியர் சமயராம் என்னைச் சந்தித்துப் பேசினார். 25-10-88 அன்று மேஜர் ரவிநாயர் (M I) இனங் காணப்படாத Lt. கேணல் ஆகியோர் முன்னிலையில் சில முகமூடிகளின் முன் அடையாள அணிவகுப்பு நடாத்தப் பட்டது.

தற்போது எனக்குக் கொடுக் கப்பட்டுள்ள கைதி இல. 43. 10-11-88 அன்று வீட்டிற்கு கடிதம் எழுத (From address) இல்லாமல் வசதி செய்து தரப் பட்டது. 13-11-88 அன்று பிரிகேடியர் சமயராமும் 1-12-88 இல் K. K. S. புனர் வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கொல் பாகனாவும் எம்மைச் சந்தித்தார்கள். 3-12-88 அன்று பசீர் என்பவரும் 4-12-88 அன்று ரகுபதி என்ப வரும் கடுமையாகத் தாக்கப் பட்டனர். 10-12-88 அன்று எம்மை விடுதலை செய்யக் கோரியும் எமக்குப் பத்திரிகை, வானொலி ஆகியவற்றை வேண்டியும், எமது பெற்றோ ரைச் சந்திக்க வேண்டியும் Lt Gen A. S. கல்கத்திற்கு எழுதினோம். அதன் பிரதி களை மேஜர் Gen பாண்டேயிற் கும், பிரிகேடியர் சமயராமுவிற் கும் லெப் கேணல் சுக்சீந்த சிங் கிற்கும் அனுப்பினோம். அன்று மாலை ரேடியோ வழங்கப்படு வதற்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்றும், ரேடியோ என்ற சொல்லைக் கடிதத்தில் இருந்து நீக்கிவிடும்படியும் லெப் கேணல் சுக்சீந்தர் சிங் என்னிடம் கூறினார்.

மேலும் Lt. Gen A.S. கல்கத் மேஜர் Gen பாண்டே, பிரிகேடி யர் சமயராம் ஆகியோரை எனக்கு எப்படித் தெரியும் என்றும், அவர்கள்தான் பொறுப்பாக இருக்கிறார்கள் என்று எனக்கு எப்படித் தெரியும் என்றும் அவர் விசாரணை செய்தார்.

11-12-88 அன்று ரேடியோ என்றசொல்லை நீக்கிக் கடிதத் தைக் கொடுத்தேன். அன்று மதியம் Cap. N. S. சாப்ரா என்னிடம் வந்து பத்திரிகை கொடுப்பதற்கு அனுமதி கிடைத்துவிட்டதாகவும் ஆகை யால் பத்திரிகை என்ற சொல் லைக் கடிதத்தில் நீக்கும்படியும் லெப் கேணல் பாப்காராவிற் கும் ஒரு பிரதி சேர்த்திருந்தார். அவரை எனக்கு எப்படித் தெரியும் என்று விசாரணை செய்தார். 12-12-88 பற்றி இல்லாத ரேடியோக்கள் கிடைத்தன. 13-12-88 அன்று சில பழைய Hindu பத்திரிகை கள் கிடைத்தன. 02 மாதத்தின் பின் வெளி உலகில் என்ன நடக்கிறது என்பதை இப் பழைய பத்திரிகை மூலம் அறிந் தோம். வட-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற தாகவும் கேள்விப்பட்டோம். 14-12-88 ரேடியோவிற்கான பற்றிகள் கிடைத்தன. ஆனால் இன்று வரை புதிய பத்திரிகை கள் கிடைக்கவில்லை.

என்னுடன் 16 பேர் ஓர் அறையினுள் அடைக்கப்பட் டுள்ளனர். ஏனையோர் வேறு இரண்டு அறையினுள் அடைக் கப்பட்டுள்ளனர். அவர்களுடன் எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. காலையிலும், மாலையிலும் குளிப்பதற்கும், இயற்கைக் கடன்களைக் கழிப்ப தற்கும் 15 நிமிடங்கள் வெளியே விடப்படுவோம். சலம் கழிப் பதற்கு அறையினுள் ஓர் வாளி உண்டு. இவர்களுடைய வித்தி யாசமான சாப்பாட்டினால் (எமக்குப் பழக்கமில்லாத) கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்படும்போது சென்றிகள் எம்மை வெளியே விடாவிடின் நாம் இந்த வாளிகளையோ சிறு பைகளையோ மலம் கழிப் பதற்குப் பாவிக்க வேண்டியிருக் கும். இதனால் வயிற்றைக் குமட்டும் துர்நாற்றம் ஏற்படு கின்றது. எமக்குத் தினமும் காலை 10 மணிக்கும், மாலை 4 மணிக்கும் உணவு வழங்கப் படுகின்றது. எமது அறைகளுக் குள் லைட் கிடையாது.

26-12-88 அன்று 2 (M.I) மேஜர்களாலும், 27-12-88 அன்று ஒரு (M.I) மேஜராலும் CAP போல்ஜோர்ஜ் என்பவ ராலும் விசாரிக்கப்பட்டேன். 26-12-88 — 28-12-88 வரை ஓர் இருட்டறையில் தனிமை யில் அடைக்கப்பட்டேன். வெளி உலகில் உள்ளவர்களுக்கு இங்கு என்ன நடக்கிறது என்பதோ, இங்கு வெளியே என்ன நடக்கிறது என்பதோ தெரியாது. ஆனால் எமது நிலை பற்றி வெளி உலகிற்கு இந்திய அரசு பொய் சொல்லு கிறது என்பது நிட்சயம்.

உள்துறை அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ் அவர் கள் இந்திய பாராளுமன்றத்தில் 1988 நவம்பர் 03-ம் திகதி இந்தி யாவின் விசா இல்லாமல் கள்ள மாக நுழைந்த 157 LTTE உறுப்பினர்கள் இந்தியாவி லிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் எனவும் திரு. V. கோபால்சாமி M. P. அவர்கள் IPKF முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா? எனக் கேட்டதற்கு அதைப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறி மழுப்பி விட்டார்.

20- 7-87 அன்று காயமுற்ற திரு. கிட்டுவுடன் இந்தியா சென்றேன். ஜூலை 29-ம் திகதி இலங்கை-இந்தியா ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் டில்லியில் இருந்து திரும்பிய எமது இயக்கத் தலைவர் வே. பிரபா கரனுடன் திரு. கிட்டுவும் நானும் I. A. F. விமானம் மூலம்

www.tamilarangam.net



யாழ்நகர் வந்தடைந்தோம். 12-08-87 அன்று முன்னைய யுத்தத்தில் காயப்பட்ட பலரை அழைத்துக் கொண்டு திரு கிட்டுவுடன் இரண்டு I. A. F. ஹெலிக்கொப்டரில் மதுரை சென்றேன். மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்காக திரு. கிட்டுவிற்கும் எனக்கும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் 2 கடவுச் சீட்டுகள் (இலக்கங்கள் முறையே IO 202895, IO 202896) பெற்றவுடன் இந்தியாவில் 1987 டிசம்பர் 31 வரை தங்குவதற்கான விசாக்களையும் பெற்றோம். ஆனால் IPKF, LTTE மோதல் தொடங்கியவுடன் 15-10-87 இல் இருந்து திரு. கிட்டுவும் நானும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டோம்.

18-11-87 லெப். கேணல் S.S. கில் (MI) லெப். கேணல் N. S. பெடுர் (P. R. Officer) ஆகியோருடன் எம்மால் கைது செய்யப்பட்ட 18 யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்காக யாழ்நகர் சென்றேன். 07-03-88 அன்று எமது இயக்கத் தலைவருக்கு இந்தியப் பிரதமரின் விசேட செய்தியுடன் எமது இயக்க லெப். கேணல் உறுப்பினர் ஜொனியும், நானும் லெப். கேணல் ராணா உடன் IAF விமானத்தில் வவுனியா சென்றோம். அங்கிருந்து எமது இயக்க உறுப்பினர்களுடன் நானும் ஜொனியும் எமது இயக்கத் தலைவரையும், உப தலைவரையும் சந்திக்கச் சென்றோம். ஆனால் ஒரு 'சில தினங்களில் சமாதானத் தூதுவராக வந்த ஜொனி IPKF இனால் படுகொலை செய்யப்பட்டார். நான் 20-03-88 அன்று பலத்த இராணுவத் தேடுதலின் மத்தியிலும் வவுனியா சென்று மீண்டும் IAF விமானத்தில் இந்தியா திரும்பினேன். இங்குள்ள அனைவரினது விபரமும் இந்தியப் போலீஸாரினதும் சுங்கப்பகுதியினரதும் குறிப்பீடுகளில் அவர்கள் இந்தியாவிற்குள் வரும்போதே பதியப்பட்டன. இங்குள்ள அனைவரும் இந்தியாவில் இந்திய அரசின் கண்காணிப்பின் கீழேயே இருந்தார்கள். சிலர் IAF விமானங்களிலேயே இந்தியா சென்றனர். (ஆனால் இதை சந்தோஷ் மோகன் தேவ் மறுத்துள்ளார்.)

நான் LTTE யும், இந்திய அரசும் நடத்திய சம்பிரதாய பூர்வமற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் IBயின் Director General நாராயணன் IB -IG சரணியன் Raw Dierector General A. K. வர்மா இந்தியாவிற்கான P L. O. தூதுவர் காளிட்ஷேக் தமிழக முதல்வர் M. G. R., திரு. கருணாநிதி, தமிழகப் போலிஸ் D. G. P. ரவீந்திரன் I.G (C.I.D) சர்மா உட்பட பலரை உத்தியோக பூர்வமாகச் சந்தித்தேன்.

இங்குள்ள சில சிரேஷ்ட LTTE உறுப்பினர்களை வஞ்சகமாகக் கொல்லுவதற்கு இவர்கள் திட்டமிடுகிறார்கள் என நான் சந்தேகிக்கிறேன். இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களைத் தயவு செய்து வெளி உலகிற்குத் தெரியப்படுத்தவும். MANILLAஇல் உள்ள உங்களது நிருபர் Humphrey Hawksleyக்கு எனது புது வருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும்.

தயவு செய்து இக்கடிதத்தின் பிரதிகளை கொழும்பில் உள்ள Iqbalathas [upitweekend], Qathri Ismrl (Time), Dexter Cruez (AP), Faisalsamath [Rueters] Marlin odchimar [Rueters] B. S. A. Jayawardena (Asia Week) ஆகியோருக்கு அனுப்பவும்.

இப்படிக்கு,
**செ. சி. கனகரத்தினம்**
*(ரகீம் என்று அழைக்கப்படும் செ. சி. கனகரத்தினம்)*

---

இந்திய அரசு தமிழருக்கு
பெற்றுக் கொடுத்த

## மாகாணசபை அதிகாரம் - 2

தமிழீழப் பகுதியில் புனர் நிர்மாண வேலைகள் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கையில்தான் இருக்கும் என்று முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் சொல்கிறார்.

ஆனால் உண்மை நிலை என்ன?

தமிழீழத்தில் வெளிவரும் சஞ்சீவி (25-2-1989) நாளிதழில் வெளியான சேதி இது:-

''புனர்வாழ்வு வேலைகளுக்காக உலக நாடுகள் அளித்த 50 கோடி டாலர் பணம் வடகிழக்கு மாகாணத்துக்கு மட்டுமின்றி வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட நாட்டின் சிங்களப்பகுதிகளுக்கும் செலவிடப்படும். இந்தத் தகவலை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா வெளியிட்டார்.

இப்பணியைக் கண்காணிக்க எண்மரைக் கொண்ட சிங்கள அமைச்சரவை உபகமிட்டி நியமிக்கப்பட்டு உள்ளது''.

பானை தமிழீழத்தில்
அகப்பை அவன் கையில்

www.tamilarangam.net

# செய்திக்கதிர்

### துப்பாக்கி முனையில் தேர்தல்

ஆயுதமேந்தியவர்கள் மக்களை அழைத்து வந்து வாக்களிக்கச் செய்வதாக ஈரோஸ் குழுவின் தலைவர் வே. பாலகுமார் யாழ்ப்பாணம் வாக்களிப்பு நிலையங்களைப் பார்வையிட வருகைதந்த சர்வதேச தேர்தல் அவதானிப்புக் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் புகார் தெரிவித்திருக்கிறார்.

—வீரகேசரி 16-2-89

### "பெருமாளுக்கு" பட்டைநாமம்

சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைச் சிறைகளில் இருந்துவரும் ஈ. என். டி. எல். எப், ஈ. பி. ஆர். எல். எப், டெலோ ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் விடுவிக்கப்படுவதாகக் கூறப்பட்டது. சிறீலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை எரித்தும் சிதைத்தும் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கிய வடக்கு கிழக்கு மாகாணசபை முதல்வர் வரதராஜப்பெருமாள் இந்தத் தடவை சுதந்திர தினத்தன்று சிங்கக்கொடியை மகிழ்ச்சி பொங்க ஏற்றிவைத்தும்கூட கொடுத்த வாக்குறுதியின்படி சிறையில் உள்ள இத்தமிழ் இளைஞர்களைச் சிங்கள அரசு விடுவிக்காமல் வரதராஜப் பெருமாளுக்குப் பட்டை நாமம் சாத்தியுள்ளது.

—வீரகேசரி 17-2-89

### தனித்துவத்தை இழந்ததால் படுதோல்வி

மலையகத்தில் உள்ள நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை ஆகிய ஆறு மாவட்டங்களில் இருந்தும் 10 மலையகத் தமிழர்கள்-இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் போட்டியிட்டபோதிலும் அவர்களில் ஒருவர்கூட வெற்றி பெறவில்லை.

கடந்த 77-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியாவில் இ. தொ. கா. தனித்து நின்று தனித்துவமான சின்னத்தில் (சேவல் சின்னத்தில்) போட்டியிட்டு வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

—வீரகேசரி 14-2-89

### தேசியத்துக்கு மங்களம்

இதுவரை தேசியக் கட்சிகளின் சார்பில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் பகுதிகளில் பல தமிழ் வேட்பாளர்கள் வெற்றி பெற்று வந்திருக்கின்றனர். முதல் தடவையாக இந்தத் தேர்தலில் தேசியக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட அத்தனை தமிழ் வேட்பாளர்களும் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் வன்னி மாவட்டத்தில் மட்டும் சொற்ப வாக்குகளுடன் (சிங்கள வாக்குகள் பெற்றதால்) தமிழ்ப் பெண் வேட்பாளர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வெற்றிபெற்றுள்ளார்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட தமிழ் அமைச்சர்களான தேவநாயகம், இராசதுரை, மாவட்ட அமைச்சர் ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் படுதோல்வியடைந்துள்ளனர். தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளுக்கு மங்களம் பாடியுள்ளனர்.

—தினபதி 17-2-89

### துரோகத்துக்கு துணைநின்ற நான்கு பேர்

சிறிலங்கா சிங்கள அரசையும், இந்திய இலங்கை அரசுகளால் உருவாக்கப்பட்ட வடகிழ் மாகாண பொம்மை அரசையும் தமிழீழ மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து தமிழீழ விடுதலையையே நாடி நிற்கிறார்கள்; அதற்காக உறுதியுடன் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உறுதுணையாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

கடந்த பிப்ரவரி 22-ந் தேதி மேற்படி அரசுகளால் போலீஸ் பதவிக்காக யாழ் கோட்டை போலீஸ் நிலையத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் ஆக நான்கு பேர் மட்டுமே கலந்துகொண்டுள்ளனர். மாவட்டரீதியில் போலீஸ் படைக்கு பல நூற்றுக்கணக்கான இடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும் 19 பேர் மட்டுமே மேற்படி பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். அந்த பத்தொன்பது பேரிலும் 4 பேர் மட்டுமே நேர்முகப் பரீட்சையில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

—உதயன் 23-2-89

### விரக்தியின் விளிம்பில் பெருமாள் புலம்பல்

அரசியற் சட்டத்தின் 13-வது திருத்தச் சட்டம் கூறிய அதிகாரப் பரவலாக்கத்தில் காற்பங்கு ($\frac{1}{4}$) தான் இதுவரை செய்யப்பட்டுள்ளது என்றும் முக்கிய விடயங்களான காணி, சட்டம்

www.tamilarangam.net



ஒழுங்கு ஆகியவற்றில் முன்னேற்றமில்லை என்றும் இதற்கு சில அமைச்சர்களும் நிர்வாக அதிகாரிகளுமே காரணம் என்றும் வடகிழக்கு மாகாணப் பொம்மை அரசின் முதல்வரான வரதராஜப்பெருமாள் புலம்பியிருக்கிறார்.

—தினகரன் 27-2-89

**இந்தியப் படையின் இலவச சேவையை இழந்துவிட இலங்கை அரசு விரும்பவில்லை**

கடந்த 18 மாதங்களாக இந்தியப்படை தமிழீழ விடுதலைப் போரை ஒடுக்கி அடக்கும் பணியைச் செய்துவருவதால் இலங்கை அரசுக்கு பலகோடி ரூபா (இராணுவத்துக்கான) பணச் செலவும் இராணுவ உயிரிழப்பும் இல்லாத நிலை இருந்துவருகிறது. கூலிபெறாது இந்தியப்படை ஈழத்தில் பணியாற்றி வருவதால் அதை இழந்துவிட இலங்கை அரசு விரும்பவில்லை.

அந்நியப்படை நாட்டிலிருப்பதால் தேச பக்த மக்கள் வாக்குகளைப் பெற முடியாது என்பதால் தேர்தலுக்காக அந்நியப் படையை வெளியேற்றுவோம் என்று போலி வாக்குறுதி அளித்து தேர்தலில் வென்று பதவியைத் தப்பவைத்துக்கொண்ட ஆளும் கட்சி,

மாகாணசபைக்கு உதவுவதற்கு போலீஸ் படையொன்றை அமைத்துவிட்டுத்தான் இந்தியப்படை வெளியேற்றப்படும் என்று தற்போது பல்டி அடித்துள்ளது. அதுமட்டுமல்ல. போலீஸ் படையை அமைப்பதற்கும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல் இலவச இராணுவ உதவியைத் தொடர்ந்து பெற இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

—உதயன், 24-2-89

**கொள்கையற்ற ஒற்றுமை சில நாட்களில் சிதறியது**

கொள்கையைப் பற்றிக் கவலைப்படாது ஒற்றுமைக் கோஷத்தை முழங்கி தேர்தலில் நின்று படுதோல்வி அடைந்த ஈ.பி ஆர். எல். எப். இன் கூட்டணியில் உள்ள அமைப்புகளான ஈ. பி. ஆர். எல். எப். குழுவும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒரு எம்.பி. பதவிக்காக ஏற்பட்ட கருத்து மோதல் வலுத்து பிளவுபட்டுள்ளன.

உதயன், 24-2-89

**குரங்கு பகிர்ந்த அப்பம்**

''புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள உலக நாடுகள் பல அளித்த 50 கோடி டாலர் பணம் (1500 கோடி ரூபா) வடக்கு, கிழக்கு மாகாணத்துடன் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட நாட்டின் ஏனைய (சிங்களப்) பகுதிகளிலும் செலவிடப்படும்'' என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா கருத்து வெளியிட்டார். தமிழர் புனர்வாழ்வுக்காக வெளிநாடுகள் கொடுத்த உதவிகள் குரங்கிடம் பகிரக் கொடுத்த அப்பம் போலாகிவிட்டது.

உதயன், 24-2-89

**இலங்கை அரசின் தரங்கெட்ட நடவடிக்கைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்**

1983-ம் ஆண்டிலிருந்து இலங்கை அரசின் ஆயுதப்படையினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவந்த கொலை சித்திரவதை போன்ற மனித உரிமைகள் குறித்து இலங்கைப்படையினருக்கு தண்டனை விலக்களிக்கும் சட்டமொன்றை இலங்கை அரசு கொண்டுவந்திருக்கிறது.

சிங்களப் படையினரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதுவித நிவாரணமும் கிடைக்காத நிலையில்-பாதிப்பு ஏற்படுத்திய சிங்களப் படையினருக்கு மட்டும் அநீதியான முறையில் தண்டனையிலிருந்து விலக்களித்திருக்கிறது.

பலவருடகாலமாக இலங்கைப் படையினரால் பாரதூரமான முறையில் மீறப்பட்டுவந்த மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது கடுமையான கண்டன அறிக்கைகளை வெளியிட்டுவந்தது.

''சர்வதேச மன்னிப்புச் சபை தற்போது இலங்கைப் படைகளுக்கான தண்டனை விலக்களிப்புச் சட்டம் மிகவும் பாரதூரமானதெனக் கருதுகிறது.'' என்று தண்டனை விலக்களிப்புச் சட்டத்தை நீக்குமாறு கோரும் தனது வெளியீடு ஒன்றில் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கிறது.

மேலும் இச்சட்டம் சர்வதேச சட்டங்களது தரத்திலிருந்து வேறுபடும் அம்சமாகும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை அந்த வெளியீட்டில் தெரிவித்திருக்கிறது.


—வீரகேசரி 2-3-89

**மாகாணசபைத் தேர்தலை எதிர்த்து ஆட்சேபனை மனு!**

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்று கூறி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட பூபாலபிள்ளை சந்திரகுமார் மேற்கொண்ட தேர்தல் ஆட்சேப மனுமீதான விசாரணையை மேற்கொண்ட நீதிபதி டாக்டர் அசோகா, டி. குணவர்த்தனா பிரதிவாதி

www.tamilarangam.net





வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு சாவகச்சேரி மக்கள் நிறுவியுள்ள நினைவுச்சின்னம்.

களான ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள், முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர் கே. செல்வகுமார் ஆகியோரை 31-3-89 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்துள்ளார்.

—வீரகேசரி 3-3-89

**வடகிழக்கு மக்கள் தேர்தல் மூலம் நிர்வாகத்தை நிராகரித்துள்ளனர்**

**உடுவில் கட்டபொம்மன் கழகம்**

வடக்கு கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக வடமாகாண மக்கள் தங்கள் தெரிவுக்கெனத் தம் மீது சுமத்தப்பட்ட சில கட்சிகள், ஆட்கள், குழுக்கள் ஆகியவற்றினைத் தாம் நிராகரிப்ப தாக இலங்கையர்களுக்கும், இந்தியர்களுக்கும், உலகத்தவர்களுக்கும் காட்டும் பொருட்டுத் தான் இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர்.''

''ஆகவே வடக்குப்பகுதி வாக்களிப்பின் மூலம் அவர்கள் நிர்வாகத்தில் பங்குகொள்ள விரும்புகின்றனர் எனவும் கொள்ள முடியாது. நிர்வாகத்தை நிராகரிக்கின்றனர் என்றே கொள்ளவேண்டும்.''

இவ்வாறு உடுவில் கட்டபொம்மன் கழகம் பாராளுமன்றத் தேர்தல் குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

—வீரகேசரி 3-3-89

**சிங்களச் சிறையில் தமிழிளைஞர்களின் அவலம்**

''அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் 120 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். போதுமான அளவு சவுக்காரம் (சோப்), பற்பசை, போன்றவை வழங்கப்படுவதில்லை. 5 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவர்கள் கூட இன்னும் சிறையில் இருக்கிறார்கள்.''

இவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவுவதுடன் இவர்களை விடுதலை செய்யக்கோரி அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.'' இவ்வாறு மகசீன் சிறையிலிருந்து கடந்த மாதம் விடுதலையான நமசிவாயம் சிவானந்தன் (வயது-44) சஞ்சீவி பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

—வீரகேசரி 3-3-89

**துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சம்**

அதிகாரமெதுவுமற்ற 5 அமைச்சர்களைக் கொண்ட மாகாணசபை தன் செயற்பாடுகளைக் கவனிக்க சகல மாவட்டங்களிலும் மாகாண அமைச்சர்களை நியமிக்கப்போவதாக ''முதலமைச்சர்'' வரதராஜப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவரே மாகாண அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ஏற்கெனவே மாவட்ட அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அலுவலகம் அவருக்கு வழங்கப்படும் என்றும் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார். 8-3-89, உதயன்

**ஏட்டுச்சுரைக்காய்**

ஏட்டுச்சுரைக்காய் சமையலுக்குப் பயன்படாது. அதுபோல இலங்கை அரசு தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக அரசியற் சட்டத்தில் சேர்த்துள்ளபோதிலும் அது நடைமுறைக்கு வருவதற்கான அறிகுறிகள் எதுவும் தோன்றவில்லை.

வடக்கு, கிழக்கு அரசு திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் அரசு அலுவலகங்களில் நிர்வாக வேலைகளைத் தமிழ் மொழியில் மேற்கொள்வதற்கு அதிகாரிகள் பின்னிற்கின்றனர். 9-3-89, உதயன்

**பொம்மை அமைச்சரவையிலிருந்து தயான் ராஜினாமா**

வடகிழக்கு மாகாண பொம்மை அரசின் திட்டமிடல் மனிதவள ஆற்றல் மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக இருந்த திரு. தயான் ஜயதிலகா என்ற சிங்களவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

www.tamilarangam.net



வடகிழக்கில் இந்தியப்படை நிலைகொண்டிருப்பதைக் கண்டித்தும், தமிழ் மக்கள் உணர்வுக்கு மாறாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அமைச்சரவை பதவி விலகி இடைக்காலத் தேர்தல் நடத்தி புதிய அரசைத் தெரிவு செய்யவேண்டும் என்றும், அமைச்சர்கள் தமது ஆடம்பர, ஆர்ப்பாட்டப் போக்கைக் கைவிட வேண்டும் என்றும் கோரி தயான் ஜயதிலகா தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்

—உதயன் 10-3-89

### முதலைக் கண்ணீர்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தேசியப் பட்டியலில் முதலாவதாக இடம்பெற்று எம்.பி. பதவியைப் பெறவேண்டிய சம்பந்தமூர்த்தியின் பதவியைத் தட்டிப் பறித்து எம்.பி.யான அமிர்தலிங்கம், சம்பந்தமூர்த்தி கொல்லப்பட்ட செய்தியை அறிந்த பின்பும் ஒரு நாள் அவகாசம் இருந்தும் மரணவீட்டுக்குச் செல்லாது பாராளுமன்ற ஆரம்ப நிகழ்ச்சிக்குச் சென்றார்.

சம்பந்தமூர்த்தியின் இறுதிக்கிரியை நடைபெற்ற அன்று பாராளுமன்ற எதிர்கட்சி வரிசையில் அமர்ந்து தொடக்க உரை நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டுப் பின்னர் விமானம் கிடைக்காததால் சம்பந்தமூர்த்தியின் இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியவில்லையே என்று முதலைக்கண்ணீர் வடித்திருக்கிறார்.

### கௌரவமா? பண்பாடா?

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து தமிழ் மக்களைப் புறக்கணித்துவிட்டு ஜயவர்த்தனா புதிய பாராளுமன்றக் கட்டிடத் திறப்பு விழா நடத்தியபோது - மக்களை உதாசீனம் செய்துவிட்டுப் பாராளுமன்றத்திற்கு ஜீப் வண்டியில் கொழும்பு சென்றார் அமிர்தலிங்கம். வழியில் வவுனியாவில் ஜீப் பழுதடைந்ததும் ஆட்சியாளரைத் தொடர்பு கொண்டு இன்னொரு ஜீப்வண்டியைப் பெற்றுக் கொண்டு அரசாங்க விழாவில் கலந்து கொண்டவர்தான் அமிர்தலிங்கம். அவர் தனக்காக எம். பி. பதவியை விட்டுக்கொடுத்த சம்பந்தமூர்த்தியின் இறுதி நிகழ்ச்சியைப் பெரிதாகக் கருதுவாரா? அல்லது பாராளுமன்ற ஆரம்ப விழா கௌரவம் என்று கருதுவாரா?

—வீரகேசரி 11-3-89

### கிராம நிர்வாகமும் மத்திய அரசின்கீழ்

இந்தியாவில் மாகாணங்களுக்கு உள்ள அதிகாரங்களைக் கொண்டது போன்ற அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபையை தமிழர்களுக்கு அமைத்துக் கொடுத்திருப்பதாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான ஒரு வாரத்தில் சென்னை மெரினா கடற்கரையில் ஒப்பந்த வெற்றி விழாவில் முழங்கினார் ராஜீவ் காந்தி.

ஆனால் கிராமசேவை அதிகாரிகளின் பணி கூட மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழேயே தொடர்ந்து இருந்து வரும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. கிராம அதிகாரிகள் நிர்வாகத்தை மாகாண சபைகளுக்குக் கையளிக்கும் திட்டம் எதையும் மத்திய அரசு இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்று உள்நாட்டு அமைச்சர் யூ. பி. விஜேகோன் 10-3-89 அன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

—உதயன் 12-3-89

### எங்கிருந்து ஆயுதங்கள் கிடைத்தன ?

போராளிகள் இயக்கங்கள் அனைத்தும் ஆயுதங்களைக் கையளித்துவிட்டன-விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் கொடுக்க மறுக்கின்றது என்று கூறித்தான் 10-10-87 முதல் கடந்த 2 ஆண்டு காலமாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்தியப்படை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடும் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

ஆனால் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த 25 பேர் 11-3-89 அன்று ஆயுதங்களுடன் சென்று அக்கரைப்பற்றில் 6 இலங்கை அதிரடிப் படையினரைப் பிடித்துச் சென்று பணயம் வைத்தனர். பின்னர் அக்கரைப்பற்று போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. நெவில்குருகே, இலங்கை இராணுவப் படையைச் சேர்ந்த கேணல் மாம்பகே, இந்தியப்படை மேஜர் சந்தபால் ஆகியோர் மேற்கொண்ட சமரச முயற்சியினால் அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஏனைய இயக்கங்கள் ஆயுதங்கள் முழுவதையும் கொடுத்திருந்தால் ஈ. பி. ஆர். எல். எப். குழுவினருக்கு ஆயுதங்கள் எங்கிருந்து கிடைத்தன? அவர்களிடமுள்ள ஆயுதங்களையும் - விடுதலைப் புலிகளிடம் கைப்பற்ற மேற்கொண்டு வரும் நடவடிக்கைபோன்று - கைப்பற்ற இந்தியப் படை முன்வருமா?

13-3-89, தினகரன்

www.tamilarangam.net

# நாம் அணிவகுத்துள்ளோம்!

நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க!


எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத்தெரியும்!
ஆனால்.........
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்......
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!



நாம் செல்லும் இடமெல்லாம்......
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன......

எமது படையணி விரைகிறது......
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்......!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது.
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் 1981-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கவிதை)

www.tamilarangam.net




# சமயோசிதம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஓர் ஒதுக்குப்புறமான கிராமம்.

அன்றும், வழமைபோல்...... அதே விடியல்.

இந்திய வல்லாதிக்கக் கரங்களில் இருந்து, அந்த இயந்திரத் துப்பாக்கிகளின் சடசடத்த குமுறல் அக்கிராமத்து மக்களை துயிலெழுப்புகின்றது.

ஆனால்..... எங்கும் மயான அமைதி.

அந்தக்காலை வேளையிலும்,

சேவல் கூவவில்லை......

காகம் கரையவில்லை......

கீச்சிடும் குருவிகள் இரை தேடிப் பறக்கவில்லை......

மறைவிடம் ஒன்றில் இருந்து, எமது வீரன் ஒருவன் சேதி அறிந்துவர வீதிக்கு வருகின்றான்......வீதி வெறிச்சோடிக் கிடக்கின்றது. ஒரு தெரு நாயைக்கூட வீதியில் காண முடியவில்லை.

எமது தோழன் சுற்றுமுற்றும் அவதானித்துவிட்டு, சந்திக் கடையடிக்கு மெல்ல நடக்கலானான்.

கடையடியில் ஓரளவு ஆள் சந்தடி காணப்பட்டது.

ஆனால் ஒவ்வொருவருடைய முகத்திலும் பயம் இழையோடியிருந்தது. அதிகாலையில் கேட்ட வெடிச் சத்தங்கள் ஏற்படுத்தியிருந்த பதற்ற நிலை சற்றும் தணியாமல் இருந்தது.

எமது தோழன் கடைக்குள் சென்று, கடைக்காரரிடம் ''அண்ணை! என்னவாம் உங்காலசத்தம்?.......ஆரையாம் சுட்டவங்கள்......'' கேட்கவும், வேகத்துடன் கூடிய இரைச்சலுடன் வந்த ஒரு ஜீப் சந்தியடியில் நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த ஜீப்பிற்குள்......

இந்திய வல்லாதிக்கத்தின் ஆறேழு கவசத் தொப்பிகளும், இந்திய ஆக்கிரமிப்பாளனுக்கு அடிமைச் சேவகம் செய்யும் சில தேசத் துரோகிகளின் வெள்ளை உடைகளும் தெரிந்தன.

மக்கள் மனதில் இருந்த பதற்றம், பீதி தீவிரமடைந்தது.

நவீனரக ஆயுதங்களுடன் இந்திய இராணுவம்......

கிரனைட்டுகளுடன் ஒரு விடுதலைப் புலி......

அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கப் போகிறது?......

அங்கு நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் இந்தக் கேள்வி.

ஜீப்பில் இருந்து திடுதிப்பெனக் குதித்த இராணுவத்தினர்......அவ்விடத்தில் நின்றவர்களைப் பிடித்து வரிசையாக நிறுத்தி சோதனையிட ஆரம்பித்தனர்.

நிலைமை மோசமடைந்து கொண்டிருப்பதை எமது தோழன் உணர்ந்து கொண்டான். அவனது கைகள் இடுப்பிலிருந்த குண்டுகளையும் கழுத்தில் தொங்கிய குப்பியையும் தொட்டுப்பார்க்கின்றன.

அவன் சிந்திக்கிறான். முடிவில் ஒரு தீர்க்கமான முடிவெடுக்கின்றான். என்னைச் சோதனையிடவும் ஒரு ஆக்கிரமிப்பாளன் வருவான். அப்போது கிரனைட்டுக்களை வீசித் தாக்கிவிட்டு தப்பி ஓடிவிடலாம்.

அப்போது, இராணுவத்தினர் கடையை நோக்கி வரவும் ஆறுதலாக வந்து கொண்டிருந்த ஒரு சைக்கிள் கடைக்கு முன்னால் நிற்கவும் சரியாக இருந்தது.

சைக்கிளில் இருந்த பெரியவர் கடைக்குள் பார்த்தார். அவருக்கு நிலைமை புரிந்துவிட்டது. திடீரென......

''எட தம்பி! உன்னையல்லவோ சீனி வாங்க அனுப்பினனான்...இஞ்ச வந்து ஏமிலாந்திக் கொண்டு நிக்கிறாய்?.......வா! வந்தேறு சைக்கிளை வீட்டைபோவம்.''. என்றார் அந்தப் பெரியவர்.

பெரியவர் சொல்லியதன்' அர்த்தத்தைப் புரிந்துகொண்ட எமது தோழன் சைக்கிளில் ஏறிக் கொள்கிறான்.

மெதுவாக நகர்ந்த சைக்கிள் அடுத்த வளைவு திரும்பி சில மீட்டர் தூரத்தில் நின்றது.

அப்பெரியவர்......

''தம்பி, நாங்கள் வயது போன கிழடுகள்தான். ஆனாலும் நாட்டுக்காகச் சாகிறவங்களுக்கு எங்களால் ஏலக்கூடியதைச் செய்வம். கவனம்! உதுவழிய வருவாங்கள். பார்த்துப் போமோனை!''

சொல்லிவிட்டு பெடல் கட்டையை மிதித்தார்.

சைக்கிள் மெதுவாக நகரத் தொடங்கியது.

www.tamilarangam.net

# தொடரும் அடக்குமுறைகள்

**இந்தியப்படையின் படகு மோதி ஈழத்து மீனவர் பலி**

இந்திய அமைதிப் படையினர் தமது கடற்படைப் படகொன்றால் மயிலிட்டிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகொன்றை மோதி அப்படகை இரண்டாகப் பிளந்தனர். அப்போது அதில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சண்முகராசா என்ற 32 வயது மீனவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்ட மீனவர் ஏற்கெனவே சிங்கள இராணுவத்தின் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயன், 24-2-89

**இந்தியப்படை அட்டூழியத்தால் வடமராட்சி செயலிழந்தது**

23-2-89 அன்று வடமராட்சியில் பல இடங்களில் இந்தியப் படையினர் திடீர் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து பல இடங்களைச் சுற்றி வளைத்துப் பெரும் தேடுதல் வேட்டையில் இறங்கினர். இச்சம்பவத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் சுடப்பட்டு மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். அத்துடன் வயோதிபர்கள் இருவரும் இந்தியப் படையினரால் சுடப்பட்டனர். தேவரைபாளி வதிரி கொற்றாவத்தை பொலிகண்டி ஆகிய பகுதிகளில் பலரை இந்தியப்படையினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். நெல்லியடி, கரவெட்டி, பொலிகண்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகள் தொடர்ந்து மூன்று நாட்களாகச் செயலற்றிருக்கின்றன.

**நவீன அனுமார்கள்**

இராமாயணக் கதையில் இலங்கை சென்ற அனுமார் இலங்கையை எரித்ததாகக் கூறப்படுகிறது. அதுபோல இன்றுகூட இலங்கையிலுள்ள இந்தியப்படையினர் தமிழர் பகுதிகளை 23-2-89 அன்று பாழ் செய்து கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள அம்மன்சோலை என்ற குடியிருப்பில் அமைந்த 41 குடிசைகளைத் தீயிட்டு எரித்ததுடன் 25-க்கும் அதிகமான கல் வீடுகளையும் தகர்த்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். அங்கிருந்து பெறுமதியான பொருட்களும் கொள்ளை போயுள்ளன.

இங்கிருந்து வீடுகளை இழந்து நடுத்தெருவுக்கு வந்துள்ள 41 குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்குமதிகமானோர் பொற்பதி வீதி சின்னப்பர் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

**உணவு போடப்போவதாகக் கூறி உள்ளே நுழைந்தவர்கள் பட்டினி போடுகின்றனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை, அளம்பில், செம்மலை ஆகிய பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளிலிருந்து விடுதலைப் புலிகள் உணவுப் பொருட்களைப் பெற்று வருவதாகச் சந்தேகித்த இந்தியப் படையினர் அக்கிராமங்களில் உணவுப் போக்குவரத்துக்குத் தடை விதித்துள்ளனர்.

இதனால் அங்குள்ள கடைகளில் மக்கள் எதுவிதப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. அப்பகுதிகளுக்கான அரசு மற்றும் தனியார் போக்குவரத்துக்களுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் இப்பகுதி மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மேற்படி தடைகளை உடனடியாக நீக்கி மக்கள் எதிர்நோக்கும் உணவுப் பஞ்சத்தைத் தீர்த்துவைக்குமாறு இங்குள்ள மக்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வீரகேசரி, 26-2-89


**இந்தியப்படையினரின் மிருகவெறித் தாக்குதல்!**

23-2-89 அன்று வடமராட்சியிலுள்ள கரவெட்டியில் இந்தியப் படையினரின் ஷெல் தாக்குதலில் கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரிக்கு அருகேயுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த ஒரு பெண் கொல்லப்பட்டாள். அப்பகுதியைச் சேர்ந்த மேலும் பலர் காயமுற்று மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் நெல்லியடி, வியாபாரி மூலை போன்ற பகுதிகளில் இந்தியப் படையினரின் தாக்குதல்களுக்குள்ளான வியாபாரி மூலையைச் சேர்ந்த எஸ். பஸ்தியாம் பிள்ளை (வயது 42) நெல்லியடியைச் சேர்ந்தவர்களான ஜோசப் ஆசீர்வாதம் (வயது 68) ஏ. அமிர்தநாயகம் (வயது 26), கே. ரங்கநாதன் (வயது 25), எம். ஜார்ஜ் (வயது 37) ஆகியோர்

www.tamilarangam.net





முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப்படை நடத்திய வெறியாட்டத்தின்போது எரியூட்டப்பட்ட வீடு

சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

20-2-89 அன்று மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அல்வாய் தெற்கைச் சேர்ந்த தம்பதிகளான சரவணமுத்து செல்வ நாயகம் (57), செல்வநாயகம் அரியமலர் (50) ஆகியோரும் இந்தியப் படையினரின் தாக்கு தலில் காயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அடிக்கடி வடமராட்சியில் இந்தியப் படை யினரால் மேற்கொள்ளப்பட்டு நடைபெறும் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டோர் ஏராள மாக மந்திகை மருத்துவமனைக்கே சிகிச் சைக்குச் செல்லவேண்டியிருக்கிறது.

ஆனால் இந்த மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், தாதிகள், ஊழியர்கள், இல்லாமையினால் நோயாளிகள் பல துன்பங் களை அனுபவித்து வருகின்றனர். ஊழியர்கள் தட்டுப்பாடு குறித்து இது தொடர்பான உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறியும் எதுவித பலனும் ஏற்படவில்லை.

—26-2-89, வீரகேசரி
—23-2-89, உதயன்
—26-2-89, சஞ்சீவி

### விசாரணைக்கு அழைத்துச் சென்றவரைப் பிணமாக்கிய இந்தியப்படை

1-3-89 அன்று வடமராட்சி பருத்தித்துறை உடையார் ஒழுங்கையில் இந்தியப்படையின ரால் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முரசொலி, 2-3-89

### இந்தியப் படையின் நடவடிக்கையால் விவசாயிகள் அவதி

மழையின்மையாலும், இராணுவ கெடுபிடி களினால் காலம் தாழ்ந்து விதைக்கப்பட்ட தாலும் இம்முறை கிளிநொச்சிப் பகுதியில் பெரும்பாலான வயல்களில் உற்பத்தி குன்றிக் காணப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் பயிர் செய்யப்பட்டு அறுவடைக்குத் தயாராக உள்ள வயல்களில் அறுவடை செய் வதற்குத் தொழிலாளர்கள் இல்லாததால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர். இந்தியப் படையினரின் கெடுபிடி சூழ்நிலை தொடர்ந்து நீடிப்பதால் கூடிய கூலியை வழங்கினாலும் தொழிலாளர்களைப் பெறுவது கஷ்டமாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

உதயன், 7-3-89

### இந்தியப்படை நிலைநாட்டிய அமைதி

இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் அமைதியை நிலைநாட்டப் புகுந்ததன் பின் 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 1989 மார்ச் 7-ம் தேதிவரை யாழ். மாவட்டத்தில் 76 பேர் காணாமல் போயிருப்பதாகப் போலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

1988-ம் ஆண்டு ஏப்ரலில் 12 பேரும், ஆகஸ்டில் 7 பேரும், செப்டம்பரில் 3 பேரும், அக்டோபரில் 3 பேரும், நவம்பரில் 14 பேரும், டிசம்பரில் 9 பேரும், 89-ம் ஆண்டு ஜனவரியில் 6 பேரும், பெப்ரவரியில் 8 பேரும் காணாமற் போயுள்ளனர்.

பருத்தித்துறை சுந்த உடையார் வீதியில் வைத்து குடத்தனையைச் சேர்ந்த புலேந்திரன் (30 வயது) என்ற வாலிபர் கடந்த 8-3-89 அன்று காலை இந்தியப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் சுடப்பட்டு வீதியில் அவரின் உடல் வீசப்பட்டுக் கிடந்தது.

9-3-89, வீரகேசரி

### இந்தியப்படையின் வாகன ஓட்டம்

இந்தியப்படையினர் ஒருபுறம் தமிழீழத்தில் உள்ள தமிழ் மக்களை குறிவைத்துத் தாக்கி அழித்துக்கொண்டிருக்கும் அதே வேளையில் அவர்களது கண்மூடித்தனமான வாகன ஓட்டங்களினாலும் ஏராளமான பொதுமக்கள் (பாதசாரிகள்) விபத்துக்கும், மரணத்துக்கும் ஆளாகின்றனர்.

கடந்த 7-3-89 அன்று காலை 10-30 மணி யளவில் வடமராட்சியிலுள்ள கரவெட்டி

www.tamilarangam.net



மேற்கைச் சேர்ந்த இராசம்மா வேலுப்பிள்ளை என்ற 60 வயதுப் பெண் இந்திய இராணுவத்தின் வண்டி ஒன்றினால் பருத்தித்துறை மீன் சந்தைக்கு அருகில் மோதுண்டதால் படுகாயமுற்று சத்திர சிகிச்சைக்குட்படுத்தப் பட்டாள்.

9-8-89 உதயன்

**துப்பாக்கி முனையில் ஆள் திரட்டும் இந்தியப்படை**

வடகிழக்கு மாகாண பொம்மை ஆட்சிக்கு பாதுகாப்பாக இந்தியப்படை மக்கள் தொண்டர்படை என்ற பெயரில் ஆள்திரட்டிப் பயிற்சி அளிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. ஆனால் அந்தத் தொண்டர்படையில் சேர வடகிழக்கு மாகாணத்தில் தமிழிளைஞர்கள் யாரும் முன்வரவில்லை. எனவே தொண்டர்படைக்கு துப்பாக்கிமுனையில் ஆள் திரட்டும் முயற்சியில் இந்தியப்படை இறங்கியிருக்கிறது.

கடந்த 6-3-89 அன்று சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய பகுதியைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்ட இந்தியப்படையினர் பல இளைஞர்களை அழைத்துச் சென்றனர். அந்த இளைஞர்களின் தாய்மாரும், சகோதரிகளும் அவர்களை விடுவிக்குமாறு கதறி அழுதபடி இந்தியப் படையினருக்குப் பின்னால் சென்றனர்.

அழைத்துச் செல்லப்பட்டவர்களைப் புதிய தொண்டர்படையில் சேரும்படி ஆசை வார்த்தைகள் காட்டி சேர விருப்பம் உண்டா என்று இந்தியப்படையினர் கேட்டபின் விடுவித்துள்ளனர்.


—உதயன் 10-3 89

**அமைதிப்படையின் அல்லல்**

வசாவிளான் - தெல்லிப்பளை வீதியில் வசாவிளானிலிருந்து கட்டுவன்வரை பொது மக்கள் பாவனைக்கு தடைவிதித்து அவ்வீதியை இந்திய அமைதிப்படையினர் மூடிவைத்திருக்கின்றனர். பொதுமக்கள் தெல்லிப்பளை அரசு மருத்துவமனைக்குச் செல்வதற்கும், பிற தேவைகளுக்கும் பயன்படுத்திவந்த இந்த வீதி மூடப்பட்டதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் அல்லலுறுகின்றனர்.

இதைக் கருத்திற்கொண்டு இந்த வீதியைப் பொதுமக்களின் பாவனைக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் திறந்துவிட வேண்டும் என தெல்லிப்பளை அரசின் மருத்துவமனை அபிவிருத்திச் சபைப் பொதுக்குழு இந்திய அமைதிப்படைப் பொறுப்பதிகாரியைக் கேட்டுள்ளது.

தினபதி 11-3-89



முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப்படையின் செல் தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்த தென்னைமரம்

**ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்**

இந்தியப்படை இலங்கையிலிருந்து திரும்புவது பற்றிய பேச்சுக்கள் அடிபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் வடமராட்சியில் உள்ள இந்தியப்படையினர் முகாம்களில் காவல் அரண்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

கற்கள், மணல்மூட்டைகள், பழையவாகன உதிரிப் பாகங்கள் ஆகியவற்றைக் கொண்டே காவல் அரண்கள் பலப்படுத்தப்படுகின்றன.

—உதயன் 12-3-89

**மட்டக்களப்பு மக்கள் பட்டினியால் அவதி**

மட்டுநகர், ஏறாவூர் போலீஸ் பிரிவில் கடந்த 9-3-89 அன்று காலை முதல் இந்தியப் படையினரால் அறிவிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டம் 6 நாட்களுக்கு மேலாக நீடிக்கிறது.

இப்பகுதியில் உள்ள மக்கள் எவரும் மறு அறிவித்தல் வரை தங்களது வீடுகளை விட்டு வெளியே வரக்கூடாது என இந்தியப் படையினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால் பல குடும்பங்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளன.

நெல் அறுவடை செய்யும் காலம் என்பதால் வயல்களில் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. வயல்உரிமையாளர்களுக்குபெருநட்டம்ஏற்பட்டுள்ளது ஒருபுறமிருக்க கூலித் தொழிலாளர்களும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களும் தமது கடமைகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. மட்டக்களப்புக்குச் செல்லும் முக்கிய பாதையான திருக்கோணமலை வீதியில் செல்லும் வாகனங்கள் எதுவும் கிரானில் நிறுத்தப்படக் கூடாது எனவும் இந்தியப்படையினர் பணித்துள்ளனர்.

—வீரகேசரி 15-3-89

www.tamilarangam.net

# அரசியலமைப்பின் 6-வது திருத்தச் சட்டம் தமிழர் சுயநிர்ணய உரிமையை நசுக்குகிறது

○

**தமிழ் மக்கள் இலங்கையின் அரசியலமைப்பு களையே ஏற்றுக்கொள்ளவில்லை**

இலங்கைத்தீவு முழுவதும் என்று ஒரே அரசியலமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை,

1. கோல்புறாக் - கமெரன் அரசியல் திட்டம்—1833
2. குறூ - மக்கலம் அரசியல் திட்டம்—1910
3. மானிங் தற்காலிக அரசியல் திட்டம்—1921
4. மானிங் அரசியல் திட்டம்—1924
5. டொனமூர் அரசியல் திட்டம்—1931
6. சோல்பரி அரசியல் திட்டம்—1947
7. கொல்வின் அரசியல் திட்டம்—1972
8. ஜெயவர்த்தனா அரசின் அரசியல் திட்டம்—1978

என எட்டு அரசியல் திட்டங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. இவை எவையும் தமிழ் மக்க ளின் ஒப்புதலுடனேயோ அல்லது ஒத்துழைப் புடனேயோ கொண்டுவரப்பட்டவை அல்ல.

மாறாக, 1931 இல் கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியலமைப்பிலிருந்து நடை முறைக்கு வந்த எல்லா அரசியலமைப்புச் சட்டங்களும் தமிழ் இயக்கங்களின், தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தி யிலேயே தமிழ் மக்களின் உணர்வுகளை உதா சீனம் செய்துவிட்டு நடைமுறைப்படுத்தப் பட்டன.

மேற்படி அரசியலமைப்புகளை ஆதரித்த தமிழ் பேசும் தலைவர்களோ உறுப்பினர்களோ பின்னர் நடந்த தேர்தல்களில் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். 1972-ம் ஆண்டு சிறீமாவோ ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட ஏற்கெனவே இருந்துவந்த தமிழ் மக்களின் அரை குறை உரிமைகளையும் புறக்கணித்த குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ் அமைப்புகள் அனைத்தும் கடுமையாக எதிர்த் தன. சிங்கள கட்சிகளிலிருந்த தமிழ் பேசும் உறுப்பினர்களும், சுயநலங்களுக்காக தமிழ் இயக்கங்களில் இருந்து கட்டுப்பாட்டை மீறிய சில தமிழ் பேசும் உறுப்பினர்களும் அந்த அரசியலமைப்பை ஆதரித்துக் கையெழுத்திட்ட னர். அவர்கள் அனைவரும் தமிழீழ மக்களால் (வடகிழக்கு மாகாண மக்களால்) அடுத்த தேர்தலில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

மேற்படி அரசியலமைப்பை ஆதரித்து கையெழுத்திட்ட ராஜன் செல்வநாயகம், சி. எக்ஸ். மார்ட்டின், குமாரசூரியர், அருளம்ப லம், தியாகராஜா, பதியுதீன் மொகமட், எம்.சி. அகமட், ஏ. எல். அப்துல்மஜீத் ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிறீமா வோவின் அரசியலமைப்பையும் ஆட்சியையும் ஆதரித்த தம்பிராசா, M. M. முஸ்தபா ஆகி யோரும் அடுத்து வந்த 77-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தமிழீழ மக்களால் தோற்கடிக் கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் கட்டுப்பணத்தைக்கூடப் பெற முடியாத அளவுக்கு பரிதாபகரமான முறையில் தோல்வி யைத் தழுவினர்.

அதேபோன்று 1978-ல் ஜெயவர்த்தனா வால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஆளுங்கட்சி யைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளும், பின்னர் அரசியல் சட்டத்துக்கும் ஜெயவர்த்தனா அரசுக்கும் ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் பேசும் பிரதிநிதிகளுமான K. அப்துல் மஜீத், ராஜதுரை, K. W. தேவநாயகம், மன்சூர், மஃரூப் ஜலால்தீன், ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் 1989-ம் ஆண்டு தேர்தலில் தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

எனவே கடந்தகால வரலாற்று நிகழ்வு களிலிருந்து தமிழீழ மக்கள் சிறீலங்காவின் அரசியலமைப்பை ஏற்றோ, அதற்குக் கட்டுப் பட்டோ தாம் நடக்க விரும்பியவர்களல்லர் என்பதை தமக்குக்கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

**தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவே ஆறாவது திருத்தச் சட்டம்**

ஒரு தேசிய இனத்துக்கு உரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனித்துவமான

www.tamilarangam.net



அரசொன்றை அமைத்து தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்று தெளிவான முடிவெடுத்த தமிழீழ மக்கள் அதற்காக உறுதியாக நின்று போராடிவரும் விடுதலைப் புலிகளுக்கு தங்களின் பேராதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்துவருகின்றனர்.

அடக்கு முறைகளுக்கு எதிராக வரலாற்று ரீதியாக தொடர்ந்துவரும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளை முனை மழுங்கச் செய்யவும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவும், தமிழ் பேசும் மக்களை தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்கவும் ஒரு கருவியாகவே ஜெயவர்த்தனா ஆட்சியாளரால் 1983 ஆகஸ்ட் 8-ம்நாள் அரசியல் அமைப்பில் 6-வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தச் சட்டத்தின்படி,

> 157A (1) எந்த மனிதனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாடு ஒன்றை சிறீலங்காவின் எல்லைக்குள் அமைக்க, சிறீலங்காவின் எல்லைக்கு உள்ளேயோ வெளியேயோ இருந்து தூண்டவோ, நிதியளிக்கவோ, ஊக்கப்படுத்தவோ, பிரச்சாரம் செய்யவோ, ஆலோசனை தரவோ ஆதரவளிக்கவோ கூடாது.
>
> (2) சிறீலங்காவின் எல்லைக்குள் தனி நாடு அமைப்பதை எந்தவொரு அரசியற் கட்சியோ - சங்கமோ - அமைப்போ தன் கொள்கைகளிலொன்றாகக் கொண்டிருக்கக் கூடாது.

என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை மீறுபவர்கள் நீதிமன்றில் விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால்,

★ மீறும் தனிநபர் ஏழு ஆண்டுகள் அரசியல் உரிமையை இழப்பார்.

★ அவரது சொத்துக்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் பறிமுதலாகும்.

★ பாராளுமன்ற உறுப்பினராயின் அவர் பதவி பறிக்கப்படும். பின்னர் 7 ஆண்டுகளுக்கு உறுப்பினராகும் வாய்ப்பை அவர் இழப்பார்.

★ கடவுச்சீட்டைப் பெறும் உரிமை, பரீட்சைகள் எதிலும் பங்குபற்றும் உரிமை, அசையாச் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை, சட்டத்துக்கு அமைய அனுமதிப் பத்திரமோ, பதிவோ அன்றி அரசின் ஒப்புதலோ தேவைப்படும் வணிகத்திலோ தொழிலிலோ ஈடுபடும் உரிமை இவைகளை நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து அவர் இழப்பார்.

பிரிவினைக் கொள்கையைக் கொண்டிருப்பதாக அரசியற் கட்சியொன்றோ - அமைப்போ - சங்கமோ குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து மேலே குறிப்பிட்ட தண்டனைகள் அக்கட்சியின் - அமைப்பின் - சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள், பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசு அதிகாரிகளோ ''இலங்கைஅரசின் அரசியலமைப்புச்சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குப் பாதுகாப்பாகச் செயற்படுவதுடன் சிறீலங்காவின் ஆட்சிப் பகுதிக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சிறீலங்காவுக்கு உள்ளேயோ, வெளியேயோ இருந்துகொண்டு தனிநாடொன்றை உருவாக்கும் கொள்கையைக் கொண்டிருக்கவோ, அதற்கு நிதியுதவியளிக்கவோ, ஊக்கம் கொடுக்கவோ ஆதரவாக பிரச்சாரம் செய்யவோ மாட்டேன்'' என்று சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும். இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின் நியமனம் பெறும் பாராளுமன்ற உறுப்பினரோ, அரசு அலுவலகர்களோ, நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் மேற்படி சத்தியப் பிரமாணத்தை எடுக்கவேண்டும்.

அப்படி சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறினால் அவர்கள் பதவியை இழப்பார்கள் என்றும் அரசியலமைப்பின் 6-வது திருத்தச் சட்டம் கூறுகிறது. **இந்தச் சட்டமானது தமிழர்களின் உரிமைகளைமட்டும் பறிக்கவில்லை; நசுக்கவில்லை. தமிழர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடும் உரிமைகளையும் கூட இச்சட்டம் நசுக்குகிறது.**


1983-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அரசியலமைப்பின் 6-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்புக்கு விசுவாசமாக பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்ய சூழ்நிலை சாதகமாக, பாதுகாப்பாக இல்லாததால் பதவி பறிபோனாலும் சத்தியப் பிரமாணம் எடுக்கமாட்டோம் என்று பத்தினி வேடம் போட்டு வீரம் பேசி வெளிநாட்டுக்கு ஓடிவிட்டு, அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த கூட்டணித் ''தம்பிரான்கள்'' தாம் பிரிவினைக் கோஷத்தை முன்வைத்து எம்.பி. பதவியைப் பெற்றதையும் மறந்து,

www.tamilarangam.net



## முறியடிப்பு!

இந்திய இலங்கை-ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இந்தியப் படையினர் எடுத்த முயற்சிகளை விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்கள் மூலம் முறியடித்திருக்கின்றனர் என்று THE ISLAND பத்திரிகை வெளியிட்டுள்ள கேலிச் சித்திரம்.



கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு, இன்று தமிழ் மக்களின் நலன்களைப் புறக்கணித்து எம்.பி. பதவிக்காக சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணடைந்து, பிரிவினை கேட்கமாட்டோம் பிரிவினைக்கு ஆதரவளிக்கமாட்டோம். அது எங்கள் கொள்கை அல்ல நாம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப் பிரமாணம் செய்து தேர்தலில் நின்றனர். அவர்கள் அனைவரையும் தமிழீழ மக்கள் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.

தமிழீழ மக்கள் விழிப்புடனேயே இருக்கிறார்கள். அவர்களை சுயநலவாதிகளும் பச்சோந்திகளும் என்றும் ஏமாற்றிவிட முடியாது. திம்பு பேச்சுவார்த்தையின்போது 'இலங்கை அரசுடன் சமரசம்பற்றி பேசுவதானால் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்' என்பது உட்பட நாலு நிபந்தனைகளை விடுதலைப் புலிகளுடன் கூட்டணியும் மற்றும் நான்கு அமைப்புகளும் இலங்கை அரசுக்கு விதித்தன. பின்னர் இந்திய அரசின் நெருக்குதல் காரணமாக இலங்கை அரசு நிபந்தனை எதையும் நிறைவேற்றாத போதிலும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தல்களில் பங்கேற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒருபடி மேலே போய் திம்பு பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் நான்கும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உட்பட நிறைவேற்றப்பட்டால்தான் இலங்கை அரசியல் அமைப்பின் 6-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய தாம் சத்தியப்பிரமாணம் எடுக்க முடிவெடுத்ததாக தமது தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தனர்.

சுய நிர்ணய உரிமை என்றால் என்ன? ஒரு தேசிய இனம் தன் தலைவிதியைத் தானே முடிவு செய்யும் உரிமை அதாவது பிரிந்து செல்லும் உரிமை. அந்த உரிமையை இலங்கை அரசு வழங்கிவிட்டதாக பொய் கூறிய கூட்டணியினர் தமிழர்களை ஏமாற்ற முனைந்தனர்.

ஆனால் கூட்டணியினர் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பின் 6-வது திருத்தச் சட்டம் கூறுவதென்ன? இலங்கை ஆட்சிப் பகுதிக்குள் பிரிவினை ஏற்படுத்தும் கொள்கையை எவரும் எந்த அமைப்பும் கொண்டிருக்கக்கூடாது. அப்படிக் கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் குடியுரிமையை இழப்பர், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும், பதவிகள் பறிக்கப்படும், இதில் எங்கே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது? தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கேட்கக்கூடாது - அதன் அடிப்படையில் தனியரசு அமைக்க எண்ணக் கூடாது - அதைக் கொள்கையாகக் கொண்டிருக்கக்கூடாது என்றுதானே 6-வது திருத்தச் சட்டம் கூறுகிறது. ★

www.tamilarangam.net

# போர்முனையில் புலிகள்



**4-3-89:** திருகோணமலை மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதலின் போது 6 சிறீலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒரு எம்.எல்.ஜி.எம். 16. ஒரு 203, கிரனைட் செலுத்தி, இரண்டு கோல் கொமாண்டோ ரைபிள்கள், ஒரு ஏ. கே. 47 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

**5-3-89:** நான்கு நாட்களாக முல்லைத்தீவு மாவட்டம் நித்திகைக் குளத்தில் ஆயிரக்கணக்கான இந்தியப் படையினர் விடுதலைப் புலிகளைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டதை யடுத்து அப்பகுதி முழுவதிலும் கடுமையான சண்டை நடைபெறுகிறது. இப்பகுதியில் பெருமளவில்இராணுவ அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்ட போதிலும் அதுபற்றிய செய்திகளை இந்தியப்படை இருட்டடிப்புச் செய்கிறது. இச் சண்டையில் இந்திய இராணுவம் பெரும் இழப்புகளை எதிர் நோக்கியுள்ளது

**9-3-89:** கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சியில் உள்ள ஆறுமுகம் வீதியில் இரு விடுதலைப் புலிகள் இருந்த வீட்டை இந்தியப்படையினர் சுற்றிவளைத்துத் தாக்கியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. அச்சண்டையில் ரமேஸ் என்ற வீரர் வீரமரணமடைந்தார். மற்றொரு விடுதலைப் புலி வீரர் முற்றுகையை முறியடித்து வெளியேறினார்.

**11-3-89:** யாழ் மாவட்டம் வடமராட்சியிலுள்ள திக்கம் என்னும் இடத்தில் பெருமளவு இந்தியப்படை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் இறங்கியபோது முற்றுகையிலிருந்து வெறியேற முயன்ற இரு விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது.

இறுதியில் ஒரு இந்தியப்படை வீரர் கொல்லப்பட்டார். விடுதலைப் புலி வீரர்கள் இருவரும் முற்றுகையில் இருந்து தப்பி வெளியேறினார்கள்.

**13-3-89:** யாழ் மாவட்டம் தென்மராட்சியில் உள்ள மட்டுவில் என்னும் இடத்தில் உள்ள இந்தியப் படையினரின் காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களுடன் திடீர்த் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலின்போது 2 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒரு பிறென் எல். எம். ஜி.யையும் அதற்கான இரண்டு ரவைக்கூடுகளையும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் எவ்வித இழப்புமின்றி மீண்டனர்.

யாழ் மாவட்டம் திருநெல்வேலி என்ற இடத்தில் இந்தியப் படை விடுதலைப்புலி வீரர் ஒருவரைச் சுற்றி வளைத்தது. அவரை உயிருடன் பிடிப்பதற்கு இந்தியப்படை பெரும் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் விடுதலைப் புலி வீரர் இயக்க மரபுக்கேற்ப சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

**14-3-89:** யாழ் மாவட்டத்திலுள்ள கோண்டாவில் என்னும் இடத்தில் சாந்தன், சாள்ஸ், பிறேன் ஆகிய விடுதலைப்புலி வீரர்கள் இருந்த வீடொன்றை இந்தியப்படையினர் சுற்றி வளைத்துத் தாக்கினார்கள். தமது ஆயுதங்களில் உள்ள ரவைகள் தீரும்வரை எதிர்த்துப் போராடிய விடுதலைப் புலி வீரர்கள் மூவரும் இறுதியில் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்கள்.

**15-3-89:** வன்னேரியிலிருந்து அக்கராயனுக்கு நடைபவனியாகச் சென்றுகொண்டிருந்த இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் சண்டை மூண்டது. இச்சண்டையில் இந்தியப்படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். நால்வர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமுமில்லை.

அன்று திருகோணமலை மாவட்டம்சேனையூரில் ஈ.என்.டி.எல்.எப். துரோகப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற கடும் சண்டையில் துரோகப் படையினர் பலர் கொல்லப்

www.tamilarangam.net



பட்டனர். அவர்களிடமிருந்து ஒரு ஜீ-3, ஒரு வாக்கிடோக்கி உட்பட பல பொருட்கள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன. விடுதலைப்புலிகள் தரப்பில் ஜெயா, காமன் ஆகிய வீரர்கள் வீரமரண மடைந்தனர்.

அன்று காலை ஸ்கந்தபுரம் என்ற இடத்தில் மறைந்திருந்து இந்திய இராணுவத்தினர் நடத்திய திடீர்த் தாக்குதலில் விக்ரம் என்ற விடுதலைப்புலி இயக்க வீரர் வீரமரணமடைந்தார். அவர் உடலை மீட்பதற்காக இந்தியப்படையினருடன் விடுதலைப் புலிகள் நடத்திய சண்டையில் மேலும் ரமேஷ் என்ற விடுதலைப்புலி இயக்க வீரர் வீரமரணமடைந்தார். இந்தியப்படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புகளை அறிய முடியவில்லை.



ராக்கட் லோஞ்சருடன் எதிரிகளைக் குறிபார்க்கும் விடுதலைப் புலி.

**16-3-89:** மட்டக்களப்பு மாவட்டம் ஈரக்குளம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளை தேடியழிக்க முகாமை விட்டுப் புறப்பட்ட இந்தியப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலில் இரண்டு இந்தியப்படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் நால்வர் காயமடைந்தனர்.

**17-3-89:** காலை யாழ் மாவட்டத்தின் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள புற்றளையில் விடுதலைப் புலிகள் இருந்த வீடொன்றை இந்தியப்படையினர் சுற்றி வளைத்தபோது ஏற்பட்ட கடுமையான சண்டையில் பவான், ஹரி, றோசான் ஆகிய மூன்று விடுதலைப்புலி இயக்க வீரர்கள் வீரமரண மடைந்தனர். இந்தியப்படையில் ஏற்பட்ட இழப்புகளை அறிய முடியவில்லை.

**22-3-89:** மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிப்பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் குழுவினருடன் புறப்பட்ட இந்தியப்படையினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 3 இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். விடுதலைப் புலி இயக்க வீரர் லெப்டினன்ட் மோகன் இச்சண்டையில் வீர மரணமடைந்தார்.

**24-3-89:** யாழ் மாவட்டம் வடமராட்சியைச் சேர்ந்த வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினர் சென்ற ஜீப் வண்டிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 3 இந்தியப் படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் நான்கு பேர் காயமடைந்தனர். அவர்களின் ஜீப் வண்டியும் முற்றாகச் சேத மடைந்தது.

அன்று யாழ் மாவட்டம் இணுவிலில் சென்றுகொண்டிருந்த இந்தியப் படையினரின் ஜீப் வண்டிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் ஜீப் வண்டி முற்றாகச் சிதறியது. அதில் கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் விபரம் அறிய முடியவில்லை.


அன்று யாழ் மாவட்டம் பளை என்னும் இடத்தில் இந்தியப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட றோம் என்னும் விடுதலைப் புலி இயக்க வீரர் அவர்களிடம் உயிருடன் பிடிபடாது சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

**25-3-89:** யாழ் மாவட்டம் ஆனைக்கோட்டையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் காந்தி, முகுந்தன் ஆகிய விடுதலைப் புலி இயக்க வீரர்கள் வீர மரணமடைந்தனர். இந்தியப் படை தரப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய முடியவில்லை.

**28-3-89:** திருகோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி என்னும் இடத்தில் உள்ள ஆற்றைக் கடந்து கொண்

www.tamilarangam.net





கானகத்தின் மத்தியில் எதிரிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் விடுதலைப் புலிகள்.

டிருந்த விடுதலைப்புலி வீரர்கள் மீது மறைந்திருந்து இந்தியப் படையினர் திடீரென்று தாக்குதலை மேற்கொண்டனர். இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட கடுமையான துப்பாக்கிச் சண்டையில் தயாளன் என்னும் விடுதலைப்புலி இயக்க வீரர் மரணமடைந்தார். இந்தியப் படை தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி அறிய முடியவில்லை.

**29-3-89 :** வடமராட்சியிலுள்ள வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துவிட்டு நகர்ச் சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது விடுதலைப் புலி இயக்க வீரர்கள் சதீஷ், சல்மான் ஆகிய வீரர்கள் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தனர்.

**30-3-89 :** அன்று மாலை 5 மணியளவில் வல்வெட்டித்துறை தெணியம்பையில் காவலில் ஈடுபட்டிருந்த இந்தியப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற கடுமையான சண்டையில் இந்தியப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவரது உடலை மீட்பதற்காக உடனடியாக உடுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்து 2 ஜீப் வண்டிகளில் புறப்பட்ட இந்தியப் படையினரை எதிர்கொண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அவர்கள் வந்த இரண்டு ஜீப் வண்டிகளும் முற்றாகச் சேதமடைந்தன. இந்தியப்படையினர் பலத்த இழப்புகளுடன் முகாமிற்கு ஓட்டம் பிடித்தனர்.

அன்று மாலை மட்டக்களப்பு மாவட்டம் திருகோணமடு என்ற இடத்தில் ஜீப் வண்டியில் சென்ற இலங்கை அதிரடிப் படையினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 அதிரடிப்படையினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ரீ 56 தானியங்கித் துப்பாக்கிகள் இரண்டு, அவற்றுக்கான ரவைக் கூடுகள் இரண்டு, ரவைகள் 25, ரம்ரக ரவைக்கூடுகள் 3 என்பனவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இச்சண்டையில் மணிவண்ணன் என்ற விடுதலைப் புலி இயக்க வீரர் மரணமடைந்தார்.

28-2-89 தொடக்கம் 30-3-89 வரை இந்தியப்படையினருக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போரில் 51 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர். 6 சிறீலங்கா கடற்படையினரும், 5 சிறீலங்கா இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து,

பிரென் எல். எம். ஜி - 4
எம் - 16, 203 கிறினெட்
லோஞ்சர் - 1
எம் - 16 எல். எம். ஜி - 1
ஜி 3 - 4
எஸ். எல். ஆர் - 8
ரீ - 56 - 1
ஏ. கே. ரீ - 56, மொடெல்
2-இல் - 2
கோல் கொமாண்டோ - 2
எல். எம். ஜி - 6
பிஸ்டல் - 2
சொட்கண் - 1

ஆகிய 32 ஆயுதங்களை விடுதலைப்புலி வீரர்கள் கைப்பற்றினர்.


விடுதலைப் புலிகள் தரப்பில் :-

மேஜர் கமல்,
மேஜர் அரி,
காப்டன் கைலன்,
காப்டன் சத்தியன்,
லெப்டினன்ட் சரத்,
லெப்டினன்ட் சூரன்,
லெப்டினன்ட் பவான்,
லெப்டினன்ட் சிறைவாசன் (சிறை),
லெப்டினன்ட் மணியப்,
லெப்டினன்ட் மோகன்,
லெப்டினன்ட் சாள்ஸ்,
2-வது லெப்டினன்ட் சாந்தன்,
2-வது லெப்டினன்ட் விஸ்வம்,
2-வது லெப்டினன்ட் கஸ்ரோ.

மற்றும் ரமேஷ், பாபு, பிறேம், ரமேஷ், முஸ்தபா, கரி, றொசான், காமன், ஜெயா, ஹரன், குபேந்திரன், சேவியர், துசிந்தன், கிர்மாணி, றெஜினோல்ட், மைக்கல், றோம், காந்தி, முருகன், மணிவண்ணன், ஆகிய 34 வீரர்கள் வீரமரணமடைந்துள்ளார்கள்.

www.tamilarangam.net

# வீர வணக்கம்



## மேஜர் கஜேந்திரன்

[சிங்காரவேல் சசிதரன்
20-6-1963—28-6-1987]


தமிழீழப் பிரதேசம் சிங்களப் பேரினவாதிகளால் படிப்படியாக அபகரிக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரம். கண் முன்னாலேயே அந்நியர் ஆக்கிரமிப்பு. தமிழ், முஸ்லீம் மக்களின் உயிருக்கோ உடமைக்கோ உத்தரவாதம் இல்லாமல் தமிழினம் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலம். ஏனைய தமிழ்ப் பிரதேசங்களைப் போல திருகோணமலையில் இடம் பெற்ற குடியேற்றங்களும் அவர்களால் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளும் ஓர் கண்ணீர்க் காவியம். ''இந்தக் கண்ணீர்க் காவியம் தொடர முடியாது. மாற்றி அமைக்கப்பட வேண்டும். அமைதி வழியில் இது முடியாது. ஆயுதம் ஏந்திப் போராடுவதே ஒரே வழி.'' என்ற தீர்க்கமான முடிவுடன்தான் திருகோணமலை இந்துக்கல்லூரி மாணவன் சசிதரன் கஜேந்திரன் ஆனான்.

1983-ல் தன்னை விடுதலைப் புலிகளோடு இணைத்துக்கொண்ட இவன் எஸ். எல். ஆர். (SLR) துப்பாக்கியால் குறிதவறாமல் சுடுவதில் தன்னிகரற்றவன். இவனது திறமைக்காக தலைவர் பிரபாகரனால் புது எஸ் எல். ஆர் (SLR) துப்பாக்கி ஒன்று இவனுக்கு வழங்கப்பட்டது.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளுக்கு ஆரம்பகால மருத்துவன் இவன்தான். இராணுவப் பயிற்சியின் போது மருத்துவர் பயிற்சியும் திறம்படப் பெற்ற இவன் மூதூர் தளபதி கணேசுடன் சேர்ந்து சிறீலங்கா இராணுவத்திற்கும் போலீசாருக்கும் எதிராக பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தினான்.

2-6-85 அன்று மேன்காமம், கங்குவேலியில் இருந்து 45 தமிழ் பெண்களை சிங்கள இராணுவமும், சிங்களக் காடையரும் கடத்திச் சென்று மானபங்கப்படுத்தி கொலைசெய்ய முற்பட்ட வேளையில் மேஜர் கணேசுடன் கஜேந்திரனும் சேர்ந்து அவர்களைக் காப்பாற்றினான்.

5-11-1986-ல் மூதூர் தளபதி கணேஸ் வீரமரணமடைந்தபோது



மேஜர் கஜேந்திரன்

மனமுடைந்து போன மூதூர் மக்களுக்குக் கிடைத்த புதிய வலுவான கரம் கஜேந்திரன்.

தமிழீழத்தில் ஒன்றிணைந்து வாழ்ந்துவரும் தமிழ், முஸ்லீம் மக்களிடையே திட்டமிட்டு மோதல்களை உருவாக்கி அவர்கள் ஒற்றுமையைக் குலைப்பதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தை சுலபமாக அழிக்கலாம் என சிறீலங்கா அரசும், இஸ்ரேலிய மொசாட் உளவு அமைப்பும் செயற்பட்டு வந்தன.

இவர்களின் திட்டமிட்ட செயலால் தமிழ், முஸ்லீம் மக்களிடையே மோதல்கள் ஏற்பட்டபோது கஜேந்திரன் தமிழ், முஸ்லீம் மக்களின் ஒற்றுமைக்காகத் தனது சக போராளிகளுடன் கடுமையாகப் பாடுபட்டான். சிறீலங்கா அரசினதும், மொசாட்டினதும் திட்டமிட்ட சதிகளை அம்பலப்படுத்தினான்.

28-6-87 தமிழீழம், தமிழினத்தின் விடுதலைக்காகவும், தமிழ்-முஸ்லீம் மக்களின் ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட தனது அருமை மைந்தர்கள் 9 பேரை இழந்து கண்கலங்கி நின்றது.

கூனித்தீவில் நடந்த சுற்றி வளைப்பில் ஏற்பட்ட மோதலில் கப்டன் முத்துச்சாமி, கப்டன் சுதர்சன், கப்டன் குழியா (சிறி), லெப். சுரேஷ், 2-வது லெப். கோபி, நிமால், நாகூர், லோயிர் ஆகியோருடன் மேஜர் கஜேந்திரனும் வீரமரணமடைந்தான்.

www.tamilarangam.net

# உலகத்தின் பார்வையில்

சிறீலங்காவில் இன்று வரை இந்திய அமைதிப்படை கிட்டத் தட்ட 900 வீரர்களைக் களத்தில் இழந்திருக்கிறது. முன்பின் தெரியாத எதிரிகளோடு நம் வீரர்கள் போராடவில்லை. தமிழ்த் தீவிரவாதிகளைப் படையாக அமைத்தவர்களும் பயிற்சி கொடுத்தவர்களும் நம்மவர்களே. இன்று வயது வந்த இளைஞர்கள்-பெண்கள்-ஏன் - சிறுவர்கள்கூட கடுமையாக - மூர்க்கத்தனமாக அங்கே போராடுகிறார்கள். நம்மால் ஒரு தீர்வைக் காண முடியவில்லை. எதிரியைத் துவக்கத்திலேயே முறையாக நாம் கணிக்க முடியாமல் போனதால் இன்று நமது பல உயிர்களை நாம் இழந்து நிற்கிறோம்.

Rear Admiral
SATYINDRA SINGH (Retd)
Indian Express 28-4-1989

இராணுவத் தளபதிகளின் மாநாட்டில் முதல்நாள் உரையாற்றிய பிரதமர் ராஜீவ்காந்தி சிறீலங்காவில் இருந்து இந்திய அமைதிப்படையைத் திருப்பிப் பெறுவது பற்றிப் பேசியிருக்கிறார். இது எத்தனை விரைவில் நடைபெறுமோ அத்தனை நல்லதே. சரியாக - முறையாக சண்டை போடாமல்-இந்தியப் படை அங்கே வெற்றிபெற இயலாமல் தடுமாறுகிறது.

எல்லாம் சரியாகத் திட்டமிட்டு - இந்தியப்படை ஒரு தாக்குதலுக்கு ஏற்பாடு செய்த பின்பு - விடுதலைப் புலிகளின் கெட்டித்தனமான உளவுத் துறை அதை எப்படியோ அறிந்துவிடுகிறது. அந்தச் சேதி உள்ளூர் எல். ரி. ரி. ஈ. தளபதிக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

இந்தியா ஒன்றில் முறையாகப்போர் செய்ய வேண்டும். இல்லையென்றால் நாட்டுக்குத் திரும்பவேண்டும்.

இந்திய அமைதிப்படையின் போர்த்தந்திரக் குறைவும் - அணுகுமுறைப் பிழையுமே இன்றுள்ள தோல்வி நிலைக்குக் காரணமாகும்.

BHARRT KARNAD
India Week
28 April 4 May 1989

இந்தியா படைகளைக் கொண்டு சிறீலங்காவின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. மாலதீவில் இந்தியாவின் ஆணை செயல்படுகிறது. பங்களாதேஷை இந்தியா தன் காலின் கீழ் வைத்துள்ளது. பாகிஸ்தானின் எதிரியான ஆப்கான் அரசுக்கு அது ஆதரவு தருகிறது. இப்போது நேபாளத்தை அது தன் 'குத்தகை நாடாக்க' முயல்கிறது. தங்கள் தீங்கான ஆக்கிரமிப்புப் போக்கைக் குறைத்துக்கொள்ள உலகின் வல்லரசுகளெல்லாம் முயலும் ஒரு காலகட்டத்தில் ஆக்கிரமிப்பு வெறி கொண்ட ஒரு புதிய வல்லரசை (இந்தியா) இன்று ஆசியா கருத்தரித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடு. மகாத்மா காந்தியின் போதனைகளைப் பின்பற்றும் நாடு. அணிசேரா இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் நாடுகளில் - ஒரு நாடு. ஆனால் இந்தத் தகுதிகளெல்லாம் இந்தியாவுக்கு தான் நினைத்தபடி நடக்க 'லைசன்சு' வழங்கியுள்ளதாக இந்தியா நினைத்துக்கொள்ளக்கூடாது.

THE ECONOMIST
(London)
April 15 - 1989

'ஓர் அந்நிய மண்ணில் கடினமான அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள இந்தியப் படைகளின் மானமும் மரியாதையும் மிக முக்கியமானது' என்று 'இந்து' பத்திரிகை (21-4-1989) ஆசிரியர் தலையங்கம் கூறுகிறது. இந்தியா தன் படைகளின் மானத்தை - மரியாதையைப் பற்றிக் கவலைப்படலாம் - ஆனால் சிறீலங்கா அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படவில்லை.

சில வாரங்களுக்கு முன்புதான் சிறீலங்காவின் எல்லா அரசியல் கட்சிகளும் தாங்கள் தேர்தலில் வென்றதும் இந்திய அமைதிப்படையை நாட்டைவிட்டு வெளியேற்றுவோம் என்று கூறுரைத்தார்கள்.


இன்று ஜே.வி.பி.யும், எல்.ரி. ரி.ஈ.யும் இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும் என்று கூறுகின்றன.

இந்த நிலைதான் 'இந்து' பத்திரிகையின் நெஞ்சைச் குடைந்திருக்க வேண்டும்.

வவுனியா காடுகளுக்குள் விடுதலைப் புலிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டார்கள் என்று இந்துப் பத்திரிகை மார் தட்டுகிறது. இது உண்மை அல்ல. இந்தியப் படைகளின் மானத்தையும் - மரியாதையையும் பற்றிக் கவலைப்படும் இந்துப் பத்திரிகையிடம் ஒன்றைக் கேட்கிறோம் - இந்திய - சிறீலங்கா உடன்படிக்கையின் ஓர் அம்சமான 'புலிகளிடம் ஆயுதம் பறிப்பதை' இந்தியப்படை சாதிக்க முடியாமல் போனதால்தானே இந்த ஒப்பந்தம் தோல்வியடைந்துள்ளது?

The Editorial
THE ISLAND
(Colombo)
26 April 1989

www.tamilarangam.net



காப்டன் வரதப்பா (சுரேஷ்குமார்) 7.10.64.
வீரமரணம் 30.4.89.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன் அட்டை : தமிழீழத்தில் தலைவர்
பிரபாகரனுடன் வை. கோபால்சாமி



இந்தியப் படையிடமிருந்து
விடுதலைப்புலிகள்
கைப்பற்றிய ஆயுதங்களை
வை. கோபால்சாமி பார்வையிடுகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்